
அக்ஷயா
மாத நாவல்
ரூ.10/-
வெற்றித் திருமகள்
அகிலா கோவிந்த்



# வெற்றித் திருமகள்...!

அகிலா கோவிந்த்



'நந்தினி'

குடும்ப

நாவலில்

உங்கள்

அபிமான

எழுத்தாளர்

'அகிலா கோவிந்த்'

எழுதும்

"நீயும் நானும் வேறல்ல"

பரபரப்பான விற்பனையில்

# 1

தேவிக்கு அன்று தன் வீட்டில் நடப்பதையெல்லாம் பார்க்கையில் ஆத்திரமாகவும், எரிச்சலாகவும் தான் வந்தது. "கையை மீறி நடக்கும் என்பார்களே..." அதுபோல் தான் எல்லாம் நடந்து கொண்டிருந்தது.

யார் இந்த கார்த்திகேயன்?

திடீரென எங்கிருந்து முளைத்தான் இவன்?

'கார்த்தி ஸார்...' 'கார்த்தி... அங்கிள்...' என்றெல்லாம் வார்த்தைகளால் விளித்தவர்கள் இன்று வாய் நிறைய 'மாப்பிள்ளை...' என்று சொல்லி அழைக்கும் அளவுக்கு விஷயம் போய்விட்டதே!

எல்லாம் அப்பாவைச் சொல்லியாக வேண்டும். அப்பா குருநாதர். அரசுப் பள்ளியில் வேலை பார்த்து ஒய்வு பெற்ற தமிழாசிரியர். வீடு, லைப்ரரி, புத்தகம் என நேரத்தைக் கழிப்பவர். அத்தோடு சும்மா இருந்துவிட்டுப் போக வேண்டியதுதானே?

ரோட்டில் ஒருநாள் திடீரென சந்தித்த தனது பழைய மாணாக்கனைக் கண்டு புளகாங்கிதம் அடைந்து மெய்சிலிர்த்து வீட்டுக்கே கூட்டி வந்துவிட்டார்!

அவரிடம் ஆறாம் வகுப்பு தமிழ் பாடம் படித்த மாணாக்கன் இந்த கார்த்திகேயனாம்!

இன்று உயரத்தில் மட்டுமல்ல. படித்து, உழைத்து சொந்தத் தொழில் செய்து வாழ்க்கையில் அந்தஸ்தில் உயர இருப்பவன். பளபள கார் வைத்திருக்கும் பெரும் கோடீஸ்வரன்!

அது போதாதா அப்பாவிற்கு? என்னிடம் படித்தவன்! என்னுடைய பழைய மாணாக்கனாச்சே... பின் சும்மாவா? வாழ்க்கையில் முன்னேறாமல் இருப்பானா? என்றெல்லாம் மார்தட்டினார் அப்பா.



நன்றி மறவாதவன். தமிழ் படித்த குருவான என்னைக் கண்டுப்பிடித்ததும் ரோட்டிலேயே சாஷ்டாங்கமாய் விழுந்துவிட்டான் பாரேன்! நானே ஒரு கணம் ஆடிப் போய்விட்டேன். என்ன ஒரு பணிவு! என்ன ஒரு மரியாதை!

புகழாரம் சூட்டினார் அப்பா. அதற்கு கார்த்திகேயன் எல்லோர் முன்னும் காட்டிய ஒரு வெட்கமான இளிப்பு தேவிக்கு எரிச்சலையே ஏற்படுத்தியது.

கார்த்திகேயன் வந்த கொஞ்ச நாளிலேயே எல்லோரிடமும் பழகிவிட்டான். வீட்டு உறுப்பினர் போல ஏறக்குறைய ஆகிவிட்டான்.

முதலில் அப்பாவை குறி வைத்து பயன்படுத்தினான். அவரது ஆசையைப் புரிந்துகொண்டு நிறைய புத்தகங்களை வாங்கி பரிசளித்தான்.

பின் அந்த நூல்களை வைக்க சிறிய ரேக் ஒன்றும் வாங்கிக் கொடுத்தான். குருநாதரின் நெடுநாள் கனவான 'வீட்டிலே ஒரு நூல் நிலையம்' எளிதில் அவனால் உருவாயிற்று. தினம் புத்தகங்களை அடுக்கி வைப்பதும், ஒவ்வொன்றாய் எடுத்துப் படிப்பதுமாய் ஆனந்தப்பட ஆரம்பித்தார் குருநாதர்.

அதையே சாக்காய் வைத்து தினம் இரண்டொரு புத்தகங்களோடு காலையிலே வந்துவிடுவான் கார்த்திகேயன். இலக்கியம் பற்றி லேசாய் குருநாதரை உசுப்பிவிட்டால் போதும், தன்னையே மறந்து எதிராளி கவனிக்கிறானா இல்லையா எனக்கூட உணராமல் மடமடவென கொட்ட ஆரம்பித்து விடுவார் அவர்.

அடுத்து கார்த்திகேயனின் பார்வை தம்பிகள் பக்கம் போகும். புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு படிப்பது போல இருக்கும் அவர்களிடம் தனது பைக்குள் இருந்து எடுத்த காட்பரீஸ் சாக்லெட்டுகளை காட்டுவான் கார்த்திகேயன்.

குருவி கொத்திக்கொண்டு போவது போல் படக்கென பிடுங்கிக் கொண்டு போவர். அத்தோடு கார்த்திகேயன்

அப்பாவிற்கு புது வேஷ்டி, சட்டை. அம்மாவுக்கு விலையுயர்ந்த புடவை. அவன் நீட்டியபோது காணாததை கண்டது போல் வாங்கிக் கொண்டார்கள். மெய்சிலிர்த்து ஆசிர்வாதம் செய்தார்கள்.

கொஞ்சமாவது யோசித்தார்களா? நமக்கு துணிமணிகள் வாங்கிக் கொடுக்க யார் இவன்? எந்த உறவு என்று?

போதாக்குறைக்கு கார்த்திகேயன் அவளிடமும் ஸ்வீட் பாக்ஸ் ஒன்றை நீட்டினான்.

வேண்டுமென்றே, "எனக்கு ஸ்வீட் பிடிக்காது. காரம் தான் பிடிக்கும்..." என்றாள்.

"அப்படியானால் என்னை உங்களுக்கு ரொம்ப பிடிக்கும் என்று சொல்லுங்கள்..." என்றான். அவளைப் பார்த்து சிரிப்பும், குறுகுறுப்பு பார்வையுமாய்.

"மிஸ்டர்..." குரலை உயர்த்தினாள் அவள்.

அவனோ சர்வ சாதாரணமாய், "மிஸ்டர் கார்த்திகேயன், எம்.காம்., யூனிக் கன்சல்டன்ஸி, மேனேஜிங் டைரக்டர். வயது முப்பது. கல்யாணம் இன்னும் ஆகவில்லை. விபரங்கள் போதுமா? இன்னும் வேண்டுமா?" என்றான் சிரிப்பை தொடர்ந்தவாறு.

என்ன ஒரு திமிர்! அவள் வீட்டிற்கு வந்து, அவளிடமே எதிருக்கு எதிராய் பேசிக்கொண்டு...? நினைத்தவள் அவனுக்கு ஒரு குட்டு வைக்க நினைத்து, "பாவம் அந்தப் பெண்!" என்றாள். சூள் கொட்டிக்கொண்டு.

"யாரைச் சொல்கிறாய்?" என்றான் கார்த்திகேயன்.

"அதுதான்... முப்பது வயது கல்யாணம் ஆகாத உங்களை கட்டிக்கொள்ள எங்கோ காத்திருப்பாளே... அவளைத்தான் சொல்கிறேன்..." என்றாள் குத்தலாய்.

பதிலுக்கு கடகடவென சிரித்தான் அவன்.

"உன்னைப் பார்த்து நீயே ரொம்பவும் பரிதாபப்படாதே... பெண்ணே..." என்றான்.



அவன் சொல்லிய விதமும், தொடர்ந்த அவனது விஷமமான சிரிப்பும் கண்டு தேவி ஒரேடியாய் திடுக்கிட்டுவிட்டாள். என்ன சொன்னான்... அந்த பரிதாபப் பெண் அவள் தானா? அப்படியானால்...?

ஆக... அவனது குறி அவள்தானா?

அவளுக்காகத்தான் வீட்டில் எல்லோரிடமும் இப்படி ஒரு டிராமா, 'ஸ்டண்ட்' போடுகிறானா?

கடவுளே! நிஜம்மா இது...?

அவள் கொதித்து கேள்விகளை கேட்பதற்குள் அங்கிருந்து அகன்றிருந்தான் அவன்.

தேவி அப்படி ஒரேடியாய் திடுக்கிடுவதற்கு வேறு ஒரு வலுவான காரணமும் இருந்தது. அவள் மனதில் வேறு ஒருவனுக்கு இடம் கொடுத்திருப்பதும், அதை இன்னும் அவள் வீட்டில் சொல்லாமல் மறைத்து காலம் தாழ்த்தி வருவதும், அவளை இன்னும் கலவரப்படுத்தியது.

## 2

தமிழாசிரியர் குருநாதர், மனைவி கமலம், தேவி தங்கை, இரு குட்டித் தம்பிகள் என அளவான மிடில் கிளாஸ் குடும்பம் தான். தான் வேலை பார்க்கும் வரையில் சிரத்தையாய் வீட்டுப் பொருளாதார நிலையை சமாளித்து தேவியை டிகிரி வரை படிக்க வைத்துவிட்டார் குருநாதர்.

அவளுக்கும் தம்பிகளுக்கும் வயது இடைவெளி அதிகம் தான். அவள் டிகிரி முடிக்கையில் ஒரு தம்பி ஆறாம் வகுப்பிலும் மற்றவன் ஐந்தாம் வகுப்பிலுமாய் இருந்தான். அவள் அப்படி டிகிரியை முடிக்கவும், குருநாதர் வேலையிலிருந்து ஓய்வு பெறவும் சரியாயிருந்தது.

உடனே தன் நிலை உணர்ந்து வீட்டுப் பொறுப்பை கையில் எடுத்துக்கொண்டவளாய் மேற்படிப்பு எண்ணத்தைக் கைவிட்டு விட்டு வேலைக்குச் செல்ல தீர்மானித்தாள் தேவி.

குருநாதரின் நண்பர் ஒருவரின் முயற்சியால் நகரின் பிரபல கார்மெண்ட் எக்ஸ்போர்ட் கம்பெனியில் சூபர்வைசர் வேலை கிடைத்தது. மாதம் ஏழாயிரம் சம்பளம்தான் என்றாலும், அப்பாவின் பென்ஷன் போக, குடும்பத்தை எவ்வித பணப் பிரச்சனையுமில்லாமல் கொண்டு செல்ல அது ரொம்பவும் உதவியாயிருந்தது.

தினம் தினம் எகிறுகிற விலைவாசியில் ஒருவாறு நிலைமைகளை சமாளித்தாலும், தாய் கமலம்தான் புலம்புவாள். "ஊம்... இன்னும் எத்தனை நாள் என் மகளை இப்படி பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்? அவளுக்கும் இந்த ஐப்பசியைத் தாண்டினால் வயது இருபத்திரண்டை தொட்டுவிடுமே? நெற்குதிர் போல் திபுதிபுவென வளர்த்தால் மட்டும் போதுமா? நாளைக்கு கல்யாணம் காட்சி என்றால் நகை நட்டு வேண்டுமே? இருக்கிற பத்து பவுண் நகையை வைத்துக்கொண்டு கல்யாணச் சந்தையில் முழம்தானே போட முடியும்?" என்பாள்.

குருநாதரோ அது பற்றி ரொம்பவும் அலட்டிக் கொள்ளாதவர் போல், 'விடு கமலம். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலா போய்விடுவான்? வழி கிடைக்கும்!' என்பார்.

"ம்ஹூக்கும்! மரம் வைத்ததே நாம் தானே? தேவி என்ன ஊரார் பிள்ளையா? இது என்ன பொறுப்பற்ற பேச்சு?" என மறுபடியும் பொரிய ஆரம்பித்துவிடுவாள்.

குருநாதர் அதற்கு மேல் அவளிடம் வாயைத் திறக்கவோ தர்க்கம் செய்யவோ மாட்டார். தலையைக் குனிந்தபடி பக்கத்தில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் தேவியைப் பார்த்து, "பார்! எருமை மாட்டின் மீது மழை பெய்கிறது..." என சொல்லிச் சிரிப்பார்.

தேவியும் குபுக்கென பொங்கும் கிலுகிலு சிரிப்பை அடக்கியபடி குனிந்து கொள்வாள். அம்மாவின் குரலில் உள்ள



வேதனையும் அவளுக்குப் புரியும். அதேநேரம் முதுமையின் பிடியில் சிறு சிறு நோய்களுடன் போராடும் தந்தையின் இயலாமையும் அவளுக்குத் தெரியும்.

அம்மா கடைசியில், "ம்ஹூம்! விட்டது... விதிப்படி!" என அலுப்புடன் பேச்சை முடிப்பது போல் தேவியும் 'விதிப்படி நடக்கட்டும். கவலைப்படுவது வீண்...' என நினைப்புகளை ஒதுக்கிவிடுவாள்.

ஆனால் அம்மாதான் விடமாட்டாள். தேவியின் ஜாதகத்தை தூக்கிக்கொண்டு கிளி ஜோசியத்தில் ஆரம்பித்து மரத்தடி ஜோதிடர், கைரேகை நிபுணர் என ஒன்றுவிடாமல் அலசி ஆராய்வாள்.

போதாக்குறைக்கு பக்கத்து அக்கம் பக்கம் வீடுகளில் இரவல் வாங்கி தின பேப்பர், வார மாத புத்தகங்களை புரட்டுவாள். தேவியின் ராசிக்கு அதில் வந்துள்ள ஜோதிட பலன்களை விழுந்து விழுந்து படிப்பாள்.

அன்றும் அப்படித்தான். தினப் பேப்பர் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தவள், உற்சாகமாய் கூவினாள். "தேவி உன் ராசிக்கு ஏழாம் இடத்தில் சுக்ரன் வருவதால் இனி யோகம் தானாம். அடுத்த மாதம் முதல் பொன்னான நேரம் உனக்கு ஆரம்பிக்கப் போகிறதாம்..." என உரக்க திரும்பத் திரும்ப படித்த போது தேவி அலுத்தவள், "ஐயோ...! அம்மா! என் ராசியில் இந்த ஊரில் குறைந்தது ஒரு லட்சம் பேராவது இருக்கமாட்டார்களா? அத்தனை பேருக்கும் இந்த ஜோசியத்தில் சொல்வது போல் ராஜயோகமும் பொன்னான நேரமும் வந்தால் இந்த ஊர் தாங்கத்தான் செய்யுமா?" என கேலி செய்து சிரிப்பாள்.

ஆனால் கமலம் விடவில்லை "பாரேன்! கண்டிப்பாய் நடக்கத்தான் போகிறது. இதுநாள் வரை உன் ராசியில் எழுதாத அதிர்ஷ்டத்தை இந்த வாரம் தான் எழுதியிருக்கிறார்கள். கண்டிப்பாய் நடக்கும்...!" என்றாள் உறுதி தொணிக்கும் குரலில்.

கமலம் அப்படிச் சொன்ன நேரமோ என்னவோ? அடுத்த மாதமே கார்த்திகேயன் அவர்களது குடும்பத்திற்கு

அறிமுகமாகிவிட்டான். பழக்கம் ஏற்பட்ட சில நாட்களிலேயே நெருக்கம் காட்டி அடிக்கடி வீட்டிற்கு வந்து போகும் குடும்ப உறுப்பினன் போலவே ஆகிவிட்டான்.

அம்மா ஞாபகமாய் அவளிடம் வந்து, "பார்த்தாயா கண்ணு? அன்று அந்த தினப் பேப்பர் ராசி பலனில் போட்டது போல உனக்கு ராஜயோகமும் பொன்னான காலமும் தேடி வந்துவிட்டது பார்த்தாயா?" என விளித்தபோது தேவிக்கு பக்கென்றுதான் இருந்தது.

அவள் புரியாமல் விழிப்பதைப் பார்த்து, "அதான்... அப்பாவின் மாணாக்கர் மிஸ்டர் கார்த்திகேயன்..." என விளக்கியபோது திடுக்கிடவே செய்தாள் தேவி.

"ஐயோ! அப்படியெல்லாம் கற்பனை செய்யாதீர்கள் அம்மா...! அவர்கள் பணக்காரர்கள். அந்தஸ்து... பணபலம்... என எல்லாவற்றிலுமே உயரம். நாம் ஏணி வைத்தாலும் எட்டாது...!" என அம்மாவின் அந்த நினைப்பை முளையிலே கிள்ளியெறியத் துடித்தாள் அவள்.

ஆனால் கமலமோ அவள் வாயை அடைப்பதிலே குறியாயிருந்தாள். "நீ சின்னப் பெண் கண்ணு. உனக்குத்தான் இதுவெல்லாம் புரியாது. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்." என்றாள்.

தேவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனால் அவன் கார்த்திகேயனோ, ஒவ்வொரு நாளும் எட்டடி, பதினாறடி... என குறிபார்த்து தாவிக் கொண்டிருந்தான்.

எல்லாம் ஒரு வகையில் சொல்லப் போனால் லஞ்சம்தான்! புத்தகப் பைத்தியமான அப்பாவிற்கு தினம் தினம் புத்தகங்கள். அம்மாவிற்கு கோயில் பிரசாதத்தில் ஆரம்பித்து மளிகைக் கடை சாமான் வரை ஓடியாடி தன் பணத்தில் வாங்கிக் கொடுத்துக்கொண்டு.

யார் என்ன கொடுப்பார்கள்? என வாய் பிளந்து கொண்டிருக்கும் தம்பிமார்களுக்கு சாக்லேட், கேக், ஐஸ்க்ரீம்,



கார் சவாரி... என அவர்கள் குதிபோட்டு மகிழும் வரை. தங்கை சுபாவுக்கு பேஸ் க்ரீம்மில் ஆரம்பித்து புதிய சுடிதார் செட் வரை.

ஆக... அந்த வீட்டிலேயே மடங்காதவள் அவனது லஞ்ச மாயைக்கு மயங்காதவள் அவள் மட்டும்தான்!

மறுநாள் சாயங்காலம் வழக்கம் போல் குருநாதரை தேடி வந்த கார்த்திகேயன், "உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது..." என ஆரம்பித்து, "இங்கு இந்த லயன்ஸ் காலனியில் எங்களது தொழில் வர்த்தக சங்கம் மூலம் எல்லோருக்கும் பயன்படக்கூடிய வகையில் நூலகம் ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நூலகராய் அந்த நூலகத்தை பொறுப்பாய் பார்த்துக்கொள்ள முடியுமா? மாதம் ஐந்தாயிரம் சம்பளம்!" என்று அவன் சொல்லி முடிக்கும் முன் தோளில் கிடந்த துண்ட உதறியபடி அப்பா எழுந்துவிட்டார். சொல்லுங்கள் எப்போது வேலையில் சேர வேண்டும்?" என்று அப்போதே தயாராகிவிட்டார்.

கார்த்திகேயனால் ஒரே மாதத்தில் வீட்டின் பொருளாதார நிலைமை உயர்ந்துவிட்டது. அப்பாவின் ஐந்தாயிர சம்பளப் பணம், ஐம்பது ரூபாய் கட்டு ஒன்றாய் வழங்கப்பட்டது. அந்த நோட்டுக் கட்டை விசிறியபடியே வீட்டிற்குள் சந்தோஷமாய் வந்தார் அவர்.

எல்லோருக்கும் மயக்கம் போட்டு விழாத குறைதான்!

அப்பாவின் பென்ஷன் பணம், தேவியின் சம்பளம், அத்தோடு இந்த ஐந்தாயிரம் எல்லாவற்றையும் சேர்த்தால் மாதம் இருபதாயிரம் ரூபாய் வருமானம் அவர்களுக்கு!

வீட்டு வாடகை மூவாயிரம், மளிகை மற்றச் செலவுகள் எல்லாம் போக எப்படியும் பத்தாயிரம் ரூபாய் மிஞ்சுமே!

அன்றே தங்கை சுபா அடம்பிடித்து எல்லோரையும் துணிக்கடைக்கு அழைத்துச் சென்றுவிட்டாள்.

எல்லோருக்கும் புதுத் துணிமணிகள்!

தாய், தந்தை, தங்கை, தம்பிகள் என எல்லோர் முகத்திலும் குஷி! சந்தோஷக் களை! அள்வில்லா மகிழ்ச்சி தாண்டவம். திகைத்தவள் தேவி மட்டுமே!

# 3

தேவி அஞ்சியதற்கு சரியான காரணமும் இருந்தது. எல்லாவற்றுக்கும் காரணம் ஆனந்தன். அவள் மனதில் குடிகொண்ட அதிசய ஆனந்தன்தான்!

பொதுவாக தேவி தானுண்டு, தன் வேலையுண்டு என சிரத்தையாக செல்கிற, இருக்கிற டைப்தான். இந்தக் காதல் கத்தரிக்காய் சமாச்சாரங்கள் எல்லாம் அவளுக்கு சுத்தமாய் பிடிக்காதுதான். எத்தனையோ இடிமன்னர்களை வழியும் ரோமியோக்களை எல்லாம் ஒரு இகழ்ச்சியான பார்வையை வீசிவிட்டு விடுவிடுவென அகன்றுவிடுவாள்.

அப்படிப்பட்டவள் அவள் வேலை பார்க்கும் கார்மெண்ட்ஸ் யூனிட்டில் அமைதியும் சாந்த சொரூபமாய் வந்த மேனேஜர் ஆனந்தனைப் பார்த்து அதிசயிக்கவே செய்தாள்.

ஆனந்தனின் அமைதியான பாங்கு, அவளிடம் மட்டுமல்லாமல் மற்றவர்களிடமும் மிகவும் மரியாதை கொடுத்து நடந்துகொள்ளும் அவனது தன்மை எல்லாமே அவளைக் கவர்ந்தது.

அவள் யூனிட்டின் செக்ஷன் சூபர்வைசர் என்பதால் அடிக்கடி அவனிடம் சென்று ரிப்போர்ட் செய்ய வேண்டியிருக்கும். குறிப்புகளை எழுதி வாங்க வேண்டியிருக்கும். ஆனந்தன் அளவாக அவளிடம் பேசுவான்.

பேசி முடித்ததும் எவ்வித சலனமுமில்லாது முகத்தைத் திருப்பி வேலையில் ஆழ்ந்துகொள்வான். அவள்தான் விழிகள் விரிய அவனைப் பார்ப்பாள். அவளும் வேலைக்கு சேர்ந்த கடந்த ஆறு மாதங்களாகப் பார்த்துவிட்டாள்.

அவனுடன் எத்தனையோ முறை பேசியிருந்தபோதும் அவன் நிமிர்ந்து அவளை சரியாய் பார்த்தானா, பார்த்திருப்பானா...? என்ற சந்தேகம்தான் அவளுக்கு.



அவளது அழகிய தோற்றமும் அலையலையான நீண்ட கூந்தலழகும் எத்தனைப் பேரை திரும்பத் திரும்ப பார்க்க வந்திருக்கிறது. விழி பிதுங்க பார்க்கும் அந்த ஏக்கப் பார்வைகளை எத்தனை முறை சந்தித்திருக்கிறாள்?

ஆனால் ஆனந்தனை எதுவும் செய்யவில்லையே...? அவன் நிஜமாகவே அவளைப் பார்க்கவில்லையா... இல்லை அவளது அழகுதான் அவனை சலனப்படுத்தவில்லையா?

இப்படியொரு கேள்வி எழுந்து மனதை துளைக்க தினம் அவளையறியாமல் ஆனந்தனை கவனிக்க ஆரம்பித்தாள் அவள். தொடர்ந்து அவனது செய்கைகளை, நடவடிக்கைகளை கவனித்தவள், அவன் அதிசயமாய் பேசும்போது மெய்மறந்தவள் போல் விழிக்கத்தான் செய்தாள்.

தினம் வீட்டிற்கு வந்த பிறகும் ஆனந்தனைப் பற்றிய நினைப்புகளே துரத்த, "என்ன ஆயிற்று? எதனால் இப்படி?" என தனக்குத்தானே கேட்டு மனதுள் தடுமாறினாள்.

தொடர்ந்து வந்த இரு நாட்களில் ஆனந்தனுடன் யதேச்சையாய் ரெஸ்ட்டாரண்ட் ஒன்றும் செல்ல நேர்ந்தபோது அந்த தடுமாற்றத்தின் காரணமும் அவளுக்குப் புரிந்தது. காதலா...? நானாவது காதலிப்பதாவது...? வெகுண்டு கேட்டுக்கொண்டவள் மனம் தன்னையறியாமல் ஆனந்தனுடன் பேசுவதில் பழகுவதில் ஈடுபாடு காட்டுவதைக் கண்டு அதிர்ந்தாள்.

அந்த இனம் புரியா உணர்வு, புதுவிதமான சலனம் ஆனந்தனுக்கும் ஏற்பட்டதோ என்னவோ... அவனும்... தனது சுபாவத்தை மாற்றிக்கொண்டு அவளிடம் அதிகம் பேசினான். சின்னதாய் இளிப்பு செய்கிறவன் அழகாக முறுவலித்து இதழ்களில் வசீகரச் சிரிப்பொன்றை அவள் பார்க்கும் நேரமெல்லாம் தவழவிட்டான்.

மெல்ல ரெஸ்ட்டாரண்டுக்கு செல்ல ஆரம்பித்த அவர்களது பழக்கம் பூங்கா, பீச் என செல்ல ஆரம்பித்து, ஒருநாள் ஆனந்தனை தன் வீட்டிற்கே கூட்டி வந்து எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

உடன் வேலைப் பார்ப்பவன் என்பதாலோ என்னவோ தேவியின் வீட்டில் ஆனந்தனை யாரும் பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை. அலுவலக பழக்கம் வெறும் நட்பு முறை என்று நினைத்துக் கொண்டார்கள்.

தேவிதான் அம்மாவிடம், "அம்மா, அவருக்குத் தங்கமான குணம். நல்ல மனசு..." என்றெல்லாம் ஆரம்பித்து ஏதோ சொல்ல வர, "குணத்தை மனதை வைத்து என்ன செய்ய...? மானேஜர் என்று சொல்கிறாய்... ஒரு பைக் கூட வாங்க முடியவில்லை. மொபட்டில் தானே வருகிறார்?" என பொருளாதார குற்றத்தை அம்மா கண்டுபிடித்த போது வாயடைத்துதான் போனாள் அவள்.

அப்பாவின் விஷயத்திலோ வேறு மாதிரி நடந்தது. ஆனந்தனுக்கு புத்தக வாசனையே பிடிக்காது. அப்பா தன் மேஜை மீது பல புதிய புத்தகங்களை படிக்க வாங்கி வைத்திருப்பதைப் பார்த்தவன், "இவ்வளவு புத்தகங்களா...? எவ்வளவு பணம் செலவாகியிருக்கும்?" என்று சொல்லிவிட அவரது முகம் கூம்பிவிட்டது. அவனிடம் பேச விரும்பாதவராய் முகத்தை திருப்பிக்கொண்டார் அப்பா.

மேலும் ஆனந்தன் தங்கை சுபாவிடமும் சரி, தம்பிகளிடமும் சரி சிடுசிடுவென பேச அவர்களும் முகத்தைத் திருப்பிக் கொண்டனர்.

ஆக அந்த வீட்டில் யாருக்குமே ஆனந்தனை முதல் சந்திப்பிலேயே பிடிக்காமல் போயிற்று.

இதைக் கண்டு ரொம்பவும் அதிர்ந்தவள் தேவிதான். அவள் தனியாக ஒரு திட்டமே வைத்திருந்தாள். இப்படி ஆனந்தனை அடிக்கடி வீட்டுப் பக்கம் கூட்டி வந்து பேச வைத்துவிட்டால் எல்லோரும் அவனிடம் பேசக்கூடும். பழகக்கூடும். அப்படி நன்கு பழகிவிட்டால், தான் அந்த ஆனந்தனை விரும்புவதாய் வீட்டில் எளிதில் சொல்லிவிடலாம் அல்லவா!

ஆனால் ஆனந்தனின் முதல் சந்திப்பே வீட்டில் வேப்பங்காயாய் ஆகிவிட்டதால் இனி என்ன செய்ய என்றுதான் யோசித்தாள்.



இதையெல்லாம் புரியாத ஆனந்தனோ, "ஆமாம் தேவி எதற்காக என்னை உன் வீட்டிற்கு அழைத்துப் போய் அறிமுகப்படுத்தினாய்?" என்றான்.

உண்மையைச் சொல்ல விரும்பாதவளாய், "சும்மாத்தான்..." என்றாள்.

"இல்லை... எனக்குத் தெரியும்..." என்றான் அவன்.

"என்ன தெரியும்? சொல்லுங்கள்!"

"நீ என்னை விரும்புகிறாய்...!"

பட்டென பட்டாணி போல் உடைத்தான் ஆனந்தன். "அதனால்தான் உன் வீட்டினரோடு பழக அறிமுகம் செய்ய... என்னைக் கூட்டிப் போனாய்...!" என்றான்.

"தெரிந்துமா... அப்படி நடந்து கொண்டீர்கள்?" என்றாள் முகம் சிவந்தவளாய் தன்னை முழுவதுமாய் கண்டுபிடித்துவிட்டானே என்ற ஆச்சரியத்தோடு.

"என்ன சொல்கிறாய் தேவி?"

"என் வீட்டினரோடு கொஞ்சம் இன்முகமாய் நடந்திருக்கலாம் அல்லவா? அவர்களுக்கும் உங்கள் மீது ஒரு நல்ல அபிப்ராயம் ஏற்பட்டிருக்கும்..."

"அப்படியா?" என திகைத்துப் பார்த்த ஆனந்தன்.

"இப்போது அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?" என்றான் ஆர்வமாய்.

நிமிர்ந்து அவன் கண்களை கூர்ந்து பார்த்து விட்டுச் சொன்னாள்.

"சரியான சிடுமூஞ்சு என்று...!"

பக்கென்று சிரித்துவிட்டான் ஆனந்தன்.

அவளுக்கும் சிரிப்பு வந்தது. சிரித்தாள். பின் நிறுத்தி, "இந்தச் சிரிப்பை அன்றே சிரித்திருக்க வேண்டும் ஆனந்தன்..." என்றாள்.

"அவர்களை விடு! உனக்கு என்னைப் பிடித்திருக்கிறது தானே? அது போதும்!" என்றான் அவன் சிரிப்பினூடே

# 4

தேவி வேலை முடிந்து பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தவள் தற்செயலாய் அதைப் பார்த்து அதிரத்தான் செய்தாள்.

சரக்கென அவள் முன்னால் பிரேக்கிட்டு நின்றது அந்த பளபளக் கார்!

கார்த்திகேயனின் புதுக் கார். உள்ளே அவனுடன் ஈயென இளித்தபடி அப்பா, தங்கை, தம்பிகள்!

என்னாயிற்று இவர்களுக்கு? எப்படி இவர்கள் இந்த கார்த்திகேயன் காரில்...? என அவள் திகைக்கும் போதே காரின் உரிமையாளர் போல் அசால்டாக பின் கதவை திறந்துவிட்டார் அப்பா.

"ஏறிக்கொள்ளம்மா...!" என்றவரை குனிந்து முறைக்கத்தான் செய்தாள் தேவி.

"என்னப்பா இது...?"

"அது... அது... ஒன்றுமில்லை... தேவிம்மா... பழைய மார்க்கெட்டில் குற்றாலக் குறவஞ்சி பற்றிய புத்தகம் ஒன்று வாங்க வேண்டியிருந்தது. நான் கிளம்பும் சமயம் கார்த்திகேயன் தம்பி காரில் வந்துவிட்டார். வாருங்கள் நானும் வருகிறேன் என உடன்கூட்டி வந்துவிட்டார்... தங்கை தம்பிகளும் காரில் ஒரு ரவுண்டு போவோமே... என ஏறிக்கொண்டனர்..."

தந்தை சர்வ சாதாரணமாய்ச் சொல்ல தேவிக்கு ஆத்திரமாய்த்தான் வந்தது. ஒரு தெரிந்த நபர் காரைக் கொண்டு வந்தால்... அதற்காக இப்படியா அலைவது? தம்பிமார்களாவது... சிறு வயதினர் என விட்டுவிடலாம்...? இந்த ப்ளஸ்-டு படிக்கும் சுபாவுக்கு அறிவு எங்கே போயிற்று? அவளும் காணாததைக் கண்டது போல் ஏறியிருக்கிறாளே? என பற்களைக் கடித்தாள்.



இடையில் கார்த்திகேயன் வேறு குனிந்து, "தயக்கம் வேண்டாம். ஏறிக் கொள்ளுங்கள்...!" என்றான். அன்று அவன் ஸ்டைலான கூலிங் கிளாஸ் வேறு போட்டிருந்தான். அது அவளை மேலும் எரிச்சல்படுத்தி ஏளனமாய் தன்னை பார்ப்பது போலவும் தேவிக்கு உணர வைத்தது.

"எதற்கு கார்...? வேண்டாம்... எனக்கு பஸ் வரும்...!" என அவள் சொல்லி முடிப்பதற்குள் உள்ளிருந்த தங்கை சட்டென அவள் கையைப் பிடித்து இழுத்துவிட்டாள். "அட... சும்மா வா அக்கா...! பிகு பண்ணாதே...!" என்றதும் வாயடைத்து தங்கை இப்படி, 'மானத்தை வாங்குகறாளே...' என்று குமைச்சலுடன் உள்ளே ஏறினாள்.

அப்பா அதே உரிமையுடன் கதவைச் சாத்தியவர் அத்தோடு நில்லாமல், "தேவிம்மா, நாமெல்லாம் எந்தக் காலத்தில் இப்படி ஒரு பத்து லட்ச ரூபாய் காரை வாங்கி குஷாலான சவாரி போக முடியும்? ஏதோ கிடைக்கும்போது அனுபவித்துக்கொள்ள வேண்டியதுதான்... ம்ம் எல்லாம்... எனது நன்றி மறவாத மாணாக்கன் கார்த்திகேயன் உபயம்..." என்று கூறி மிச்சம் மீதியாயிருந்த கொஞ்ச நஞ்ச மானத்தையும் ஒரே தவணையில் வாங்கினார்.

காரை கிளப்பிய கார்த்திகேயனும், "சிடி பிளேயர், எக்ஸ்ட்ரா பிட்டிங்ஸ் எல்லாம் சேர்த்தால் பதினொரு லட்சம்..." என விளக்கம் கொடுத்தான்.

அப்போதுதான் தம்பிகளும் ஞாபகம் வந்தவர்களாய், "அங்கிள், சிடி பிளேயர் மியூசிக் சிஸ்டத்தை கொஞ்சம் போடுங்களேன்..." என்றார்கள் கார் குஷனில் குதிக்காத குறையாய் சாய்ந்துகொண்டு.

தேவிக்குத்தான் இருப்புக் கொள்ளவில்லை. சீட்டில் சாய்ந்து உட்கார மனமில்லாமல் விளிம்புப் பகுதியிலேயே உட்கார்ந்திருந்தாள். அதை கவனித்த சுபா, "இடம் இருக்கிறது. நன்றாக சாய்ந்து உட்காருக்கா..." என்று கூறி அவளை மேலும் எரிச்சல்படுத்தினாள்.

"சரிடி...!" என்றாள் அவள் பக்கம் கோபமாய் குரலை உயர்த்தியபடி.

போதாக்குறைக்கு கார்த்திகேயன் வேறு சட்டென திரும்பி மறுபடி ஒரு சிரிப்பை உதிரவிட்டான். அந்த சிரிப்பு... எள்ளி நகையாடும் ஏளனமாகவே அவளுக்குத் தோன்றியது.

கார் வீட்டிற்குச் செல்லாமல் வேறு எங்கோ சென்று நிற்பதை அப்போதுதான் தேவி கவனித்தாள்.

"புதியதாய் திறந்திருக்கும் நகரின் பிரபலமான கஃபே இது. இங்கே நூடுல்ஸ், டிபன் அயிட்டங்கள், ஐஸ்கிரீம்கள் என எல்லாம் உண்டு. சுவையாக இருக்கும்..."

கார்த்திகேயன் சொல்லியபடி காரை நிறுத்தி திரும்புவதற்குள் தங்கை, தம்பிகள், காரை விட்டு இறங்கி போகத் தயாராகிவிட்டார்கள்.

தேவி சங்கடமாய் நெளிந்தவள் "எதற்கப்பா... ஹோட்டல்...? பேசாமல் வீட்டிற்கே சென்றுவிடலாமே...?" என்றபோது "எனக்கும் பசிக்கத்தான் செய்கிறது. லைட்டாக டிபன் எதுவும் சாப்பிட்டுவிடுவோமே...?" என்றார் அவர்.

இதற்கு என்ன செய்வது? என தலையிலடித்துக் கொண்டு இறங்கினாள் தேவி.

ஆனாலும் மானம் என்ற ஒன்று இருக்கிறதே... என நினைத்தவள் தனது ஹாண்ட் பேக்கைத் திறந்து கையிருப்பைப் பார்த்தாள். சில சில்லறைகளும் ஒரு நூறு ரூபாய் தாளும் இருந்தது.

என்ன... டிபன்... அயிட்டம்தானே? நூறு ரூபாய்க்குள் வந்தால் நாம் கொடுத்துவிடுவோம்... அப்படிக் கொடுத்தாவது கொஞ்ச நஞ்சம் மிச்சமிருக்கிற மானம் கப்பலேறாமல் பார்த்துக் கொள்வோம் என்ற முடிவுக்கு வந்தாள்.

ஆனால் இருக்கைகளில் உட்கார்ந்து தம்பிகளும் தங்கையும் மெனு கார்டை மேலும் கீழுமாய் புரட்டிய விதத்தில் அந்த நம்பிக்கையும் போயிற்று.

"எனக்கு நூடுல்ஸ்! எனக்கு ஃப்ரூட் சாலட்! எனக்கு ஸ்ட்ராபெரி கோன்...!" என ஆள் ஆளுக்கு உரக்க கத்தியபோது தேவிக்கு கோபத்திற்கு பதில் இரக்கமே வந்தது.



அவர்களும் பாவம்தானே! இந்த அப்பா இப்படி முன்ன பின்ன இதுபோன்ற ஹோட்டலுக்கு கூட்டி வந்தால் இப்படி ஆளாய்ப் பறப்பார்களா? அப்படி கூட்டி வந்த சரித்திரம்தான் அப்பாவிடம் கிடையாதே...!

திரும்பி அப்பாவைப் பார்க்க அவரோ கார்த்திகேயன் பக்கம் திரும்பி சீரியஸான குரலில், "இங்கு சாம்பார் இட்லி கிடைக்குமா? இருந்தால் ஒரு பிளேட் எனக்காக ஆர்டர் செய்யுங்கள்...!" என்றார்.

பின் அதே கரிசனத்தோடு தேவி பக்கம் திரும்பி, "நீயும் கூச்சப்படாமல் கேட்டு வாங்கிக் கொள்ளம்மா..." என்றபோது தனது குன்றிப் போன முகத்தை வைக்க தேவி இடத்தைத்தான் தேட வேண்டியிருந்தது.

ஆனாலும் ஏதாவது சாப்பிடாமல் நம்மைவிட மாட்டார்கள் என உணர்ந்தவள், "எனக்கு காபி மட்டும் போதும்..." என்றாள்.

சட்டென கார்த்திகேயனிடமிருந்து, "இங்கு காபி ரொம்ப சூடாக இருக்கும்... பரவாயில்லையா?" என்ற பதில் வந்தபோது நிமிர்ந்து பார்த்து திடுக்கிடவே செய்தாள்.

அவன் அவளையே கேலியும் குறும்புமாய் பார்த்துக் கொண்டிருந்தான். பாவி, அவள் அப்படி தவிப்பதை இவ்வளவு நேரம் ரசித்து அல்லவா பார்த்துக் கொண்டிருந்தான் போலும்!

ஆத்திரமாய் பற்களைக் கடித்தாலும் சூழ்நிலை உணர்ந்து அமைதியானாள். மறு வாரம் ஒரு படி மேலே போய், வேறுவிதமான தாக்குதல் ஒன்றையும் ஆரம்பித்திருந்தான் கார்த்திகேயன்!

## 5

தேவிக்கு என்ன தோன்றியதோ விஷயத்தை இனியும் ஆனந்தனிடம் மறைப்பது நல்லதல்ல என எல்லாவற்றையும்

அவனிடம் ஒருநாள் சொல்லிவிட்டாள்.

'என்ன உன் தந்தையின் பழைய மாணாக்கனா? பெரும் பணக்காரனா?' என்றபடி ஆனந்தனின் முகம் கறுப்பதையும் கவனித்தாள்.

"நீ எப்படி இதை அனுமதித்தாய் தேவி?" என கேள்வியும் கேட்டான் அவன்.

நான் என்ன செய்ய முடியும்? அப்பாவைப் பிடித்து வீட்டில் நுழைந்துவிட்டார். அம்மா, தங்கை, தம்பிகளுக்கு வேண்டிய உபச்சாரங்கள். எல்லோருக்கும் தலையில் ஐஸ்கட்டியை தூக்கி வைக்காத குறைதான். எல்லோருமே ஈயென இளித்துக்கொண்டு அவர் முன்னால் நிற்கிறார்கள். என்னால்தான் ஒன்றும் செய்ய முடியவில்லை...!

ஆத்திரமாய் கைகளைக் குத்தினான் ஆனந்தன்.

"ஏதாவது செய்தாக வேண்டும் தேவி. இல்லாவிட்டால் இது பெரும் ஆபத்தில் போய் முடிந்துவிடும்..."

"அதனால்தான் நானும் பயப்படுகிறேன்..." என்றாள் தேவி.

"காரையும் பணத்தையும் காட்டி மயக்கப் பார்க்கிறானா?" என மறுபடியும் பற்களைக் கடித்தவன், சட்டென குரலைத் தாழ்த்தி, "ஆனால்... நீ ஒன்றும் மயங்கிவிட மாட்டாயே தேவி...?" என்றான் சந்தேகமாய்.

"ச்சீ! என்ன பேச்சு இது?" எரிச்சலாய் முகம் வெட்டினாள் தேவி.

"இல்லை தேவி. நான் அதற்காகச் சொல்லவில்லை. இது போன்ற பணக்காரர்கள் ஆபத்தானவர்கள். திட்டம் போட்டு நம் பலவீனம் உணர்ந்து காரியத்தை சாதித்துவிடுவார்கள். நீ தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்..."

"நான் ஜாக்கிரதையாக இருக்கிறேன்..." என்றாள் உறுதியாய் அவனுக்கு நம்பிக்கை வரும் குரலில்.

ஆனால் மறுநாள் வீட்டில் நடந்த சம்பவங்கள் அவளுக்கு பெரும் பயத்தையே ஏற்படுத்தியது.



தங்கை சுபா... ரொம்ப நாளாய் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்த புது கம்ப்யூட்டர் கோர்ஸ் ஒன்றுக்கு நாற்பதாயிரம் ரூபாயை கார்த்திகேயன் அசால்ட்டாக கட்டி அவளை சேர்த்துவிட்டான்.

'படிப்பு விஷயத்திற்கு பணம் ஒரு தடையாக இருக்கக்கூடாது...' என்ற தத்துவம் வேறு.

அடுத்த இரண்டு நாட்களில் தம்பிகள் இருவரும் ஆளுக்கொரு புதிய சைக்கிளை சந்தோஷமாய் ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

எல்லாம் கார்த்திகேயனின் உபயம்!

தேவி கோபத்தின் உச்சத்திற்கே போனவளாய் அம்மாவிடம் போனாள்.

"என்னம்மா இது? எதற்காக இப்படி? ஒரு வழிப்பாதை போல் அவரிடம் இருந்து இப்படி ஒவ்வொன்றாய் வாங்கிக்கொண்டு இருப்பது என்னவோ மாதிரியாக அல்லவா இருக்கிறது?" என்றாள்.

"எனக்கும் அப்படித்தான் இருக்கிறது..." என்றாள் கனகம்.

"எதையும் எதிர்பார்க்காமலா இப்படியெல்லாம் செய்வார்? எதையோ குறி பார்த்து எதிர்பார்த்து தானே இப்படிச் செய்கிறார்?" என்று தேவி நேரிடையாகவே விஷயத்திற்கு வந்தபோது, "அவர் குறிபார்த்து எதிர்பார்க்க... இந்த வீட்டில் அப்படி என்னதான் இருக்கிறது?" என்றாள் கனகம் எதிர்கேள்வியாய்.

தேவி அம்மாவின் பதில் எல்லாம் நேரிடையான பேச்சாய் இல்லாமல் எதிர்மறையாய் வேறு எதையோ உணர்த்துவது கண்டு திடுக்கிடத்தான் செய்தாள்.

கார்த்திகேயன் மாதிரி இப்படி ஒரு ஆள் வலிய வந்து உதவி செய்யும்போது அவன் எதற்காக வருகிறான்? அவன் நோக்கம் என்னவாக இருக்கும்? என யூகிக்க முடியாத அளவுக்கு அம்மா முட்டாள் அல்லவே...!

பின்... எதனால்? ஒருவேளை... நேரிடையாய் பதில் சொல்லாமல் பதிலை யூகித்துக் கொள்ளட்டும் என்ற நினைப்பு அம்மாவிற்கு ஓடுகிறதோ?

சரி... அம்மாதான் இப்படி... அப்பா என்ன நினைக்கிறார் என தெரிந்துகொள்ளலாம் என தேவி முயற்சி செய்தபோது அதுவும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

"நல்ல பையன்... பிறருக்கு உதவும் பரோபகாரி. எல்லாவற்றுக்கும் மேல் என் நன்றி மறவாத மாணாக்கன்... இதைவிட வேறு என்ன தகுதி வேண்டும் அம்மா?" என்றார்.

அவளும் தனது திகைப்பை மறைத்து, "எதற்கு அப்பா இந்தத் தகுதி?" என்றாள்.

குருநாதர் திரும்பி வாய்விட்டு அடக்கமுடியாத சிரிப்பொன்றைச் சிரித்தார்.

"ரொம்பவும் அப்பாவியாக இருக்கிறாயே... பாப்பா..." என்றார்.

தேவி அதை ரசிக்கவில்லை. மாறாக கோபம் மூண்டவளாய், "அதனால்தான் சிலர் ஏமாற்றப் பார்க்கிறார்கள் அப்பா..." என்றாள் அழுத்தமாக.

குருநாதர் மறுபடியும் முறுவலித்து, "கார்த்திகேயன் அப்படிப்பட்டவனில்லை. நல்ல பையன். யாரையும் ஏமாற்றமாட்டான். நம்பிக்கையானவன்... அதனால்..." என்றவர் அதற்கு மேல் வெளிப்படையாகச் சொல்ல இயலாதவர் போல் தயங்கினார்.

"சொல்லுங்கள் அப்பா...! அதனால்...? சொல்லுங்கள்! என்ன சொல்ல வருகிறீர்கள்?"

குரல் உயர விரட்டுவது போல் கேட்ட அவளது நிலையைக் கண்டவர் அவள் கோபத்தில் இருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு டபக்கென நழுவினார்.

"அது ஒன்றும்... இல்லை! ஒன்றும்... இல்லை... பாப்பா...! காலப்போக்கில் நீயே புரிந்துகொள்வாய். இப்போது கவலையை விடு! வீணாக ஏன் குழம்புகிறாய்?" என முடித்து வைத்துவிட்டார்.

தேவிக்கும் அதற்குமேல் தாய், தந்தையிடம் வெளிப்படையாய் எதுவும் கேட்க முடியவில்லை. கேட்க



பயமாகவும் இருந்தது. ஆமாம், கார்த்திகேயனை அவர் விரும்புவது போல் மாப்பிள்ளை ஆக்கிக் கொண்டால்தான் என்ன...? என கேட்டுவிட்டால் என்ன செய்வது?

ஆக... தாய், தந்தை எவ்வித சங்கோஜமுமில்லாமல் கார்த்திகேயன் அள்ளித் தரும் பண உதவிகளை வாங்கிக்கொண்டு, அவனது நோக்கத்தையும், காரணத்தையும் நன்கு புரிந்துதான் வைத்திருக்கிறார்கள்.

எதனால்... இப்படி ஒரு குறுக்கு வழி போன்ற குறுகலான முடிவு எடுக்கத் துணிந்துவிட்டார்கள்? பணத்தினாலா...? இல்லை... கார்த்திகேயன் மூலம் குடும்ப பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளலாம் என்கிற பேராசையினாலா?

எது... காரணம்? எப்படி கண்டுபிடிப்பது? என இரண்டு நாள் குழம்பித்தான் தவித்தாள்.

ஆனால் மூன்றாம் நாள் கார்த்திகேயனே எல்லோர் முன்னிலையிலும் விஷயத்தை போட்டு உடைத்து அவளைப் பெரும் அதிர்ச்சியடையச் செய்தான்.

## 6

மறுவாரம் கார்த்திகேயன் தனது நேசப் பார்வையை கூட்டிவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

வந்தவன் கையில் இரண்டு கிலோ ஆப்பிள் பழங்களுடன் நுழைந்தான்.

மறுநாள் எக்ஸ்போர்ட் குவாலிட்டி என்று விதையில்லாத திராட்சைப் பெட்டி ஒன்று.

அடுத்த நாள் தங்கை தம்பிகளை காரில் ஷாப்பிங் அழைத்துப் போய் ஒரு டஜன் துணிமணிகள். விதவிதமான மேக்கப் பொருள்கள். "பில் பத்தாயிரம் வந்ததுக்கா... அலட்சியமாய் இருபது ஐநூறு ரூபாய் தாள்களை விசிறினார் அவர்..." என தங்கை சொன்னபோது தேவிக்கு அடைத்தது.

கடவுளே! இது எங்கே போய் முடியுமோ? இவர்கள் பாட்டுக்கு விவஸ்தையில்லாமல் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்?

அவன் எதையோ... எதிர்பார்த்துதானே இதையெல்லாம் செய்கிறான்?

எதையோ... என்ன...? அவளைத்தானே...? அவன் குறி அவள்தானே?

ஒவ்வொருமுறை பல்லை இளித்துக்கொண்டு அவன் வரும்போதெல்லாம் சரியான 'நோஸ்கட்' கொடுத்திருக்கிறாளே...? இருந்தும் வழிகிறானே...! இரட்டை அர்த்தம் தொனிக்கும் விதத்தில் அவ்வப்போது பூடகமாய் பேசி வேறு அவளை எரிச்சல்படுத்துகிறானே!

அப்படியானால் அவனது குறி... இலக்கு... நாம் தானே...? வீட்டில் உள்ள எல்லோரையும் பணத்தாசைக் காட்டி சரிகட்டி அவர்கள் மூலம் அவளை மணக்க சம்மதம் பெறுவதுதான் அவனது திட்டமா?

இல்லை... ஒருவேளை அவள் நினைப்பது போல் இல்லாமல் இயல்பாகவே... அப்பாவின் பழைய மாணாக்கனாய் நம் குடும்ப நிலைமையைக் கண்டு உதவுகிறானா?

அந்த நினைப்பு எழுந்தது உடனே அப்படியே மறைந்தது. சே! அப்படி இருக்காது. இந்த கலியுகத்தில் அப்படி இளிச்சவாயனாக நடந்து கொள்ளும் அளவுக்கு கார்த்திகேயன் ஒன்றும் முட்டாளல்ல...!

கார்த்திகேயன் தொழிலதிபர். ஒரு பிசினெஸ் மேன் அவன் லாபக் கணக்கு பார்க்கமாட்டானா...? தனது தான் செலவழிக்கும் ஒவ்வொரு நயா பைசாவிற்கும் லாபத்தைப் பார்க்காமல் விடமாட்டானே?

அவனது லாபம் அவள்தானா? அவளை மணந்து கொள்வதுதானா?

இப்படி ஒவ்வொன்றாக எண்ணி தேவி குழம்பத்தான் செய்தாள்.



ஆனால் அவள் அப்படி குழம்பத் தேவையில்லாமல் மறுநாள் கார்த்திகேயனே எல்லோர் முன்னிலையிலும் விஷயத்தை போட்டு உடைத்தான்.

அதுவும் சாதாரணமாக அல்ல. அன்று அம்மா கனகத்திற்கு ஒரு விலையுயர்ந்த ஜரிகைப் புடவை பெட்டியை நீட்டினான். "என்னமோ தெரியவில்லை... ஜவுளிக் கடைப் பக்கம் போனேன்... உங்கள் ஞாபகம் வந்து... எடுக்க வேண்டும் என்று தோன்றியது. என்னை ஆசிர்வதியுங்கள் அம்மா...!" என்றபடி. சாஷ்டாங்கமாய் தாயின் காலில் விழுந்துவிட்டான் கார்த்திகேயன்.

அப்படியே ஆடிப்போனாள் அம்மா.

அம்மா... மட்டுமல்ல... பக்கத்தில் அப்பா, தங்கை, தம்பி என எல்லோரும் நின்றுகொண்டு இருந்தார்கள்... தேவிகூட சமையலறையில் இருந்து தற்செயலாய் வெளிவந்து இதைப் பார்த்தவாறு திகைத்தாள்.

"ஐயோ...! எழுந்திருங்கள் தம்பி! நீங்கள் போய் என் காலில் விழுந்துகொண்டு..."

அம்மா பதற... கார்த்திகேயன் அசரவில்லை.

"முதலில் என்னை ஆசீர்வதியுங்கள் அம்மா...!" என்றான்.

அம்மாவிற்கு இது போதா? சட்டென உச்சி குளிர்ந்து போனாள்.

"தீர்க்காயுசாய்... நன்றாய் இருப்பாய் அப்பா...! நீ என் மகன் மாதிரி...!" என்றாள் நெகிழும் குரலில் ஆசிர்வதித்தபடி.

கார்த்திகேயன் மெல்ல எழுந்தான்.

"அம்மா! நான் உங்கள் மகன் மாதிரி மட்டும் தானா? மருமகனாக இருக்கக்கூடாதா?"

டக்கென்று அப்படிக் கேட்டுவிட்டான் கார்த்திகேயன்.

நொடியில், அந்த நிமிடத்தில் எல்லோர் முகத்திலும் ஒரு அதிர்ச்சி!

எல்லாம் ஓரிரு வினாடிகள்தான்.

மறு வினாடியே தேவியைத் தவிர அத்தனை பேர் முகத்திலும் எழுந்த அதிர்ச்சி அப்படியே இன்ப அதிர்ச்சியாய் பல்லிளித்தது.

"நிஜமாகவா சொல்கிறீர்கள் தம்பி?" என்றாள் அம்மா நம்பமுடியாத உலக அதிசயமாய்.

முகம் சிவந்து வெட்கப்படுபவன் போல் தலையாட்டினான் கார்த்திகேயன்.

"அதற்கு நாங்கள் ரொம்பவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் தம்பி. எல்லாம் நாங்கள் செய்த பாக்கியம். தேவி செய்த புண்ணியம்!" பூரிக்க ஆரம்பித்துவிட்டாள் அம்மா.

அப்பாவும் அதை ஆமோதிப்பது போல் ஆமாம்... பாக்கியம்தான்! எனது மாணாக்கன் ஒருவனே எனக்கு மாப்பிள்ளையாய் வருவது கொடுப்பினைதான்!" என முத்து உதிர்த்தார்.

தங்கை, தம்பிகளும் டூத் பேஸ்ட் விளம்பரமாய் கார்த்திகேயனைப் பார்த்து புல்லரிக்காத குறையாய் இளித்துக் கொண்டிருந்தனர்.

ஆக... அங்கு கொதித்துக் கொண்டிருந்தவள் தேவி ஒருத்தி மட்டும்தான்!

என்ன அநியாயம்? அவளை ஒரு வார்த்தை கேட்காமல் அவள் முன்னிலையிலேயே கார்த்திகேயன் வெகு லாவகமாய் காய் நகர்த்த அதற்கு சலாம் போடாத குறையாய் சம்மதித்து விட்டார்களே? இதை எங்கு போய் சொல்வது?

அவள் திகைத்து மௌனமாய் நின்றதைப் பார்த்து கார்த்திகேயன் என்ன நினைத்தானோ, அவள் பக்கம் திரும்பி, "ரொம்பவும் நன்றி!" என்று சொல்லிவிட்டு விறுவிறுவென போய்விட்டான்.

அவள் அப்படி மௌனமாய் இருந்ததை சம்மதமாய் நினைத்துக் கொண்டானா?

என்ன கூத்து இது?



ஆனால் அவன் கார்த்திகேயன் சென்றதும் எல்லோரும் கலைந்துவிட்டனர். அவரவர் வேலையைப் பார்க்கச் சென்றுவிட்டனர்.

அம்மாவும், அப்பாவும் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. கார்த்திகேயன் சொன்னது பற்றி அபிப்ராயம் கூட கேட்கவில்லை.

தேவையில்லை. இவளிடம் என்ன கேட்க? கார்த்திகேயன் தான் மாப்பிள்ளை... என்று முடிவே பண்ணிவிட்டார்களா?

கொதிப்பாய் நினைத்தவளின் ஆத்திரம் முழுவதும் கார்த்திகேயன் மீதுதான் திரும்பியது.

எவ்வளவு சாதுர்யமாய் விஷயத்தை கையாண்டிருக்கிறான்?

எவ்வளவு பெரிய விஷயத்தை எவ்வளவு எளிதாய் சாதித்துவிட்டான்?

அப்பா, அம்மாவிடம் சம்மதம் பெற்றுவிட்டால் அவள் தலையாட்டி விடுவாளா? உடனே அவனுக்கு கழுத்தை நீட்டி விடுவாளா?

அவ்வளவு முட்டாளா அவள்? அவளுக்கும் மனம் என்று ஒன்று இருக்கிறது. அதில் ஆனந்தன் என்பவன் காதலனாய் இருக்கிறானே!

பின் எப்படி இது சாத்தியம்?

யோசித்தவள் தீர்மானமாய் முடிவும் எடுத்தாள்.

முதலில் இந்த விஷயத்தை, ஆனந்தனை தான் காதலிக்கும் விஷயத்தை கார்த்திகேயனிடம் சொல்லிவிட வேண்டும் என உறுதி கொண்டாள். அப்படி சொல்லிவிட்டால் அதற்குமேல் அவனால் என்ன செய்ய முடியும் என்ற நினைப்பு அவளுக்கு!

ஆனால், மறுநாள் மாலை தனியே சந்தித்து கார்த்திகேயனிடம் விஷயத்தைச் சொன்னபோது கொஞ்சமும் அதிர்ச்சியடையாமல் அதிராமல் சிரித்தான் அவன்.

"காதலா...? அதுவும்... நீயா...?" என கடகட சிரிப்பு பொங்க கேட்டவன் சட்டென நிறுத்தி, "ஸோ... வாட்...? அதனால் என்ன...?" எனவும் கேட்டான்.

அவள், அவன் சொல்வதன் அர்த்தம் புரியாமல் விழிக்க அவள் கைகளைத் தட்டியபடி, "பொல்லாத காதல். நான் நினைத்தால் ஒரே வாரத்தில் காணாமல் போய்விடும். பார்க்கிறாயா?" என ஏளனமாய் கேட்க அதிர்ந்து போனாள் அவள்.

# 7

தேவி ஒரு கணம் கார்த்திகேயன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு திடுக்கிட்டே விட்டாள். என்ன ஆனந்தன் மேல் உள்ள காதல் காணாமல் போய்விடுமா? அதுவும் ஒரே மாதத்திலா? என்ன உளறுகிறான் இவன்?

"உங்களுக்கு மிஸ்டர் ஆனந்தனைத் தெரியுமா?" என்றாள் ஆச்சரியமும் திகைப்புமாக.

"தெரியாது... சொல்லு... தெரிந்து கொள்கிறேன்..." என்றான் கார்த்திகேயன் அசால்ட்டாக.

"பிறகு எப்படி ஒரே மாதத்தில் காதல் காணாமல் போய்விடும் என அபச குணமாக..."

"அபசகுணமாக இல்லை... அறிவுப்பூர்வமாக..." என வார்த்தைகளைத் திருத்தினான் கார்த்திகேயன்.

"அது என்ன அறிவுப்பூர்வமாக?"

"நீ முதலில் உன் காதல் விவகாரங்களைச் சொல்லு. நான் பதில் சொல்கிறேன்..."

தேவிக்கு அவன் கேட்டதும் அளவு கடந்த எரிச்சலே கோபமாய் வெடித்தது. ஆனாலும் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையாய்ச் சொன்னாள்.

தானும் ஆனந்தனும் வெகு மாதங்களாக பழகி வருவதாகவும், திருமணம் செய்து வாழ்க்கையில் இணைய உறுதி கொண்டிருப்பதையும் விளக்கினாள்.



மறுபடியும் கடகடவென சிரித்து அவளை எரிச்சல்படுத்தினான் கார்த்திகேயன்.

"உறுதியைக் கொண்டு குப்பையில் போடு...!" என்றான் ஏகத்தாளமாய்.

தேவியின் மூக்கு நுனி சிவந்தது.

"மிஸ்டர் கார்த்திகேயன், நான் ஒன்றும் என் காதலுக்கு அனுமதியோ, கெஞ்சலையோ கேட்கவில்லை. உங்கள் எண்ணம் ஈடேறாது. விலகிப் போகுங்கள் என்கிறேன். புரிகிறதா?"

"புரிகிறது...!"

தலையை ஆட்டிய கார்த்திகேயன், "அப்படியே நீயும் ஒன்றைப் புரிந்துகொள்..." என்றான்.

"என்ன...?"

"இந்த கார்த்திகேயன் ஒன்றும் லேசுப்பட்ட ஆளில்லை. நினைத்ததை அடையாமல் விடமாட்டான்... அதனால்...?"

"அதனால்...? என்ன...? என்ன...? சொல்லுங்கள். எங்களை கொலை செய்து விடுவீர்களா? ம்ம்...?"

கண்களை உருட்டி உரத்த குரலில் அவள் கேட்க... மீண்டும் தைரியமாகச் சிரித்தான் கார்த்திகேயன்.

"கொலையெல்லாம் தேவையில்லை... உங்கள் காதலை உடைத்து விடுவேன்... ஒரே மாதத்தில் காற்றுப் போன பலூன் போல பணாலாக்கிவிடுவேன்...! புரிகிறதா?"

"அது நடக்காத கதை...!"

"நான் நினைத்தால் நடக்கும்...! கண்டிப்பாக நடக்கும்...!"

கைகளை அடித்து கார்த்திகேயன் சொல்ல அவள் முதல்முறையாய் திடுக்கிட்டாள்.

என்ன செய்யப் போகிறான் இவன்?

அவனே அதை தன் வாயால் விளக்கினான்.

"மிஸ். தேவி, இந்த உலகத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு விலை இருக்கிறது. அதை கொடுத்துவிட்டால் போதும்... பனி விலகுவது போல் தடைகள் எல்லாம் விலகிவிடும்..."

அவன் முடிப்பதற்குள், "எனக்கும் அது தெரியும் மிஸ்டர் கார்த்திகேயன். உங்களிடம் உள்ள பணத்தைக் காட்டி என் வீட்டினரை வளைத்துப் போட்ட மாதிரி நீங்கள் என்னையோ, என் ஆனந்தனையோ மயக்கமுடியாது. பணத்திற்கோ... வசதிக்கோ பல்லைக் காட்டிக்கொண்டு அடிபணிகிற ஆட்கள் நாங்கள் இல்லை..."

"நீ சின்னப் பெண். உலகம் புரியாமல் பேசுகிறாய்..."

"உங்களுக்குத் தான் சின்னப் புத்தி. குறுக்கு வழியில் போகும் கோழைத்தனம்!"

"என்ன சொல்கிறாய்?"

"நீங்கள் சின்னத்தனமாய் என் வீட்டில் போட்ட நாடகத்தை உங்களது அற்பப் புத்தியை சொல்கிறேன்..."

"அப்படி என்ன நான் செய்துவிட்டேன்?"

"உங்களது குறி நான்தானே? என்னை மணப்பதுதானே?"

அவள் கேட்க நெஞ்சு நிமிர்த்துபவன் போல், "அதிலென்ன சந்தேகம் உனக்கு?"

"அதற்காக எப்படி கீழ்த்தரமான நாடகங்களை உங்கள் பணத்தைக் காட்டி எங்கள் வீட்டில் போட்டீர்கள்..."

அவள் சொல்ல, அவன் அப்போதுதான் ஞாபகம் வந்தது போல, "ஓ... அதைச் சொல்கிறாயா...?" என சிரித்துவிட்டு, "அது வேறு ஒன்றுமில்லை. என்னிடம் அபரீதமாய் உள்ள பணம் என்ற மூன்றெழுத்தை வைத்து சில மேஜிக்குகள் உன் வீட்டில் செய்தேன்... உன் வீட்டில் அதை அப்படியே நம்பி வட்டார்கள். பாசத்தைக் காட்டி அன்பு மழை பொழிய ஆரம்பித்துவிட்டார்கள்"

"அப்படியானால் நீங்கள் செய்தது எல்லாம் நடிப்புதானே?"

"அதில் இன்னமும் சந்தேகம் உள்ளதா உனக்கு?" என பதிலாய் எதிர்கேள்வி கேட்டான் அவன்.



வாயடைத்துப் போய் திகைத்தவள் அவனையே இமைக்காமல் ஓரிரு நிமிடங்கள் பார்த்தாள்.

அவளைப் பார்த்து அசால்ட்டாக கைகளைச் சுண்டினான் அவன். "லுக் பேபி, உனக்கு புரியும்படியே எல்லாவற்றையும் விளக்கி விடுகிறேன். உன் தந்தையை சந்தித்தது, அவரது பழைய மாணாக்கனாய் உன் வீடு வரை வந்தது வரை உண்மைதான். ஆனால் அன்று அவர் மகளாக அழகான உன்னைப் பார்த்ததும் மனதுள் சலனப்பட்டேன். நான் தேடிக் கொண்டிருக்கும் வாழ்க்கைத் துணை நீ தான்... என்று அன்றே முடிவு செய்துவிட்டேன்... நீயோ முரட்டுக் குதிரை போல் என்னை கொஞ்சமும் கண்டுகொள்ளாமல் நடமாடினாய். உன்னை... வழிக்குக் கொண்டு வருவது எப்படி என சிந்தித்தேன்... பிளான் செய்தேன்... ம்ம்... படிப்படியாக வெற்றியும் பெற்று வருகிறேன்..." என்றவன் விடாது, "மூக்கை... நேரடியாக தொட்டால் என்ன... தலையைச் சுற்றி தொட்டால் என்ன... எல்லாம் ஒன்றுதானே?" என்றும் முடித்தான்.

தேவி அவனையே தொடர்ந்து முறைத்தாள்.

"நீங்கள் நினைப்பது போல் எதுவும் நடக்காது... நடக்க விடமாட்டேன்..."

"அப்படியா...?" என்றான் அவன் பதிலுக்கு.

பின் தொடர்ந்து, "உன் காதலை... ஆனந்தனுடனான காவியக் காதலை ஒரே மாதத்தில் உடைத்துக் காட்டட்டுமா...?" என்றான்.

"உங்களால் அது முடியாது..."

"முடியும். நடத்திக் காட்டுகிறேன். அதன்பின், 'காதலாவது மண்ணாங்கட்டியாவது' என நீ... நீயே... புலம்ப... ஆரம்பித்துவிடுவாய்... இது நான் உனக்கு விடும் சவால்...!"

கைகளை உயர்த்தி கட்டை விரலை காட்டியபடி சொன்னான். பின் அங்கிருந்து விறுவிறுவென அகன்றுவிட்டான்.

திகைத்துப் போனாள் தேவி.

# 8

அன்று மாலையே ஆனந்தனுக்கு ஃபோன் செய்து அவனை வழக்கமாய் சந்திக்கும் பார்க்கிற்கு வரச் சொன்னாள் தேவி.

கார்த்திகேயன் சொன்ன விஷயங்களை அவன் காதலை உடைத்துக் காட்டுகிறேன் என்று திமிராக சவால் விட்டதை எல்லாம் உடனடியாக ஆனந்தனிடம் சொல்லி எச்சரிக்கை செய்ய வேண்டும் என நினைத்தாள்.

கார்த்திகேயன் பணக்காரன். காதலை உடைக்க என்ன வேண்டுமானாலும் செய்வான் என நினைத்தவள் அப்படி அவன் என்ன செய்யக்கூடும் எனவும் யோசித்துப் பார்த்தாள்.

என்ன சினிமாவில் காட்டுவது போல் ஆள்கள் வைத்து அடித்து ஆனந்தனின் கை கால்களை உடைக்கப் பார்ப்பானா?

அல்லது ரவுடிகளை விட்டு அவனை மிரட்டுவானா?

வேறு என்ன செய்ய முடியும்?

சிந்தித்தவள் அதே சிந்தனையுடனே ஆனந்தனை பார்க்கில் சந்தித்தாள்.

விஷயத்தை ஆனந்தனிடம் சொல்லிய போது கொஞ்சமும் அசராமல் சிரித்தான்.

"ப்பூ... இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்... எதுவானாலும் சந்திக்கத் தயார்!"

மிரட்சியாய்ப் பார்த்த அவளது தோள்களைத் தட்டி, "நீ எதற்கு பயப்படுகிறாய் தேவி, அந்த பயலால் ஒன்றும் செய்ய முடியாது. என்ன... பணத்திமிர் அவனுக்கு. கொஞ்சம் ஜாஸ்தியாய் இருக்கிறது... ஆனால்... என்ன... என்னிடம் மட்டும் வாலாட்டினால்... வாலை ஒட்டி நறுக்கிவிடுவேன்..." என்றான்.

தேவி கவலை நீங்காதவளாய் அவனைப் பார்த்தாள்.



"இல்லை... ஆனந்தன். அந்த கார்த்திகேயன் சொன்ன விதமும், அவன் குரலில் இருந்த உறுதியும் தான் எனக்கு ரொம்பவும் பயத்தைக் கொடுக்கிறது. மேலும்..."

"சொல்லு..."

"என் அப்பா, அம்மாவில் இருந்து, என் வீட்டு உறுப்பினர்கள் எல்லாம் அவன் பக்கம் இருக்கிறார்கள்..."

"ஆ... என்ன... ஒரு துரதிர்ஷ்டம்...!" என வேகமாய் கைகளை குத்தினான் ஆனந்தன். "இது ஒன்றுதான் தேவி... இடிக்கிறது. எங்கே எனக்கு நீ கிடைக்காமல் போய்விடுவாயோ என்ற பயத்தைக் கொடுக்கிறது..."

"ம்ஹூம்...!" என உதட்டைச் சுழித்தாள் தேவி.

"நான் என்ன செய்ய முடியும் ஆனந்தன்? அந்த கார்த்திகேயன் தனது பணத்தை சொகுசான காரையெல்லாம் காட்டி எல்லோரையும் தன் பக்கம் இழுத்துவிட்டான். எஞ்சி இருப்பது நான் மட்டும்தான்..."

"நீ... மாறி விடாதே... தேவி..."

"நான் ஒரு போதும் மாறமாட்டேன். வீணாக பயம் கொள்ளாதீர்கள் ஆனந்தன்..."

"எதையோ மறுபடி யோசித்து சலிப்புடன் நிமிர்ந்த ஆனந்தன், "தேவி, நான் அப்படி பயப்படவும் காரணமிருக்கிறது..." என்றான்.

"என்ன காரணம்?"

புரியாமல் தேவி விழிக்க விளக்கம் கொடுத்தான் அவன்.

"வேறு என்ன தேவி? நாம் மற்ற காதலர்களைப் போல் சினிமாக்களில் காட்டுவது போல் காதலில் நெருக்கம் காட்டுவதில்லை. ஒரு கிஸ், சின்ன அணைப்பு, லேசான தழுவல் என எதற்குமே நீ என்னை அனுமதிக்கவில்லை. சின்னதாய் விரலோடு விரல் உரசினாலே விலக்கிக் கொள்வாய். கேட்டால் பத்தாம் பசலி போல் விரல் நுனி படாமல் காதலிக்க வேண்டும். அதுதான் உண்மையான காதல் என்பாய்...! ஆனால் பார்... நாம்

மட்டும் கொஞ்சம் நெருக்கம் காட்டி அந்நியோன்யமாய் காதலித்திருந்தால் இருவருக்குமிடையே ஒரு பரஸ்பர நெருக்கம் சுகம் கிடைத்திருக்கும். அந்த சுகத்திற்காகவே நாமும் பிரிக்க முடியாத அளவிற்கு ஒன்றிப் போயிருப்போம்..."

"ச்சீ...!" என உரத்த குரலில் சொல்லி முகம் சுழித்தாள் தேவி. "உடம்பு உரசினால் தான் அது காதலா? இப்படி இன்னொரு முறை பேசாதீர்கள். எனக்கு கடும் கோபம் வந்துவிடும்..." என பற்களையும் கடித்தாள்.

தேவியின் கடுகடுத்த முகத்தையும் கோபத்தையும் கண்ட ஆனந்தன் சரேலென பின்வாங்கினான்.

"ஐயோ...! தேவி ஒரு பேச்சுக்கு ஏதோ புத்தகத்தில் படித்ததைச் சொன்னேன். உனக்கு பிடிக்கவில்லை என்றால் விடு...!" என பேச்சை மாற்றியவன், "சரி அந்த கார்த்திகேயனை சமாளிப்பதற்கு... நீ எதுவும் வழி வைத்திருக்கிறாயா...?" என்றான்.

இல்லை என்பது போல் முகம் வெட்டினாள் தேவி.

ஆனந்தன் ஓரிரு நிமிடம் தீவிரமாய் யோசிப்பது போல முகத்தை வைத்தவன் சட்டென நிமிர்ந்தான்.

"எனக்கு ஒரு யோசனை தோணுகிறது..." என்றான்,

"என்ன?"

"எதிராளி என்ன செய்யப் போகிறான் என நினைத்து குழம்புவதைவிட நேரிடையாய் நேருக்கு நேர் சந்தித்து மோதிவிடுவது மேல் என்று நினைக்கிறேன்..."

"நீங்கள் சொல்வது... புரியவில்லை ஆனந்தன்..."

"அதாவது தேவி... அந்த கார்த்திகேயனை நானே போய் நேரிடையாய் பார்க்கிறேன்... பேசுகிறேன்..."

"என்ன நீங்கள் பேசப் போகிறீர்களா?"

தலையை பலமாய் ஆட்டினான் ஆனந்தன்.

"ம்ம்... பேசுவது... என்ன சண்டையே கூட போடுவேன்! அந்த கார்த்திகேயன் பெரும் பணக்காரனாய் இருக்கலாம். ஆனால்



நாம் வாழ்வது சுதந்திர நாடு. இங்கு சட்டம் ஒழுங்கை மீறி அவனால் ஒன்றும் செய்ய முடியாது... அதனால் பேசி நியாயம் கேட்கறேன்... என்ன தான் சொல்கிறான் என பார்த்துவிடுவோம்..."

ஆனந்தன் வீறாப்பாய் பேசப் பேச தேவியே அதிசயிக்கத்தான் செய்தாள். அவன் சொல்வதும் நல்ல யோசனையாகவே அவளுக்குப் பட்டது.

"அப்படியே செய்யுங்கள் ஆனந்தன்..." என்றாள்.

ஆனந்தனுடன் அவளிடம் கார்த்திகேயன் அலுவலகம் பற்றிய விபரங்களை வாங்கிக்கொண்டு அதே வேகத்தோடு சென்றான்.

ஆனால் கார்த்திகேயனை சந்தித்தால் அவன் தன் தலைவிதியையே மாற்றிவிடுவான் என்பதை அவன் கொஞ்சமும் உணரவில்லை.

## 9

ஒரு மாதம் சென்றிருக்கும்.

ஒருநாள் திடீரென தான் வேலை பார்க்கும் அலுவலகத்திற்கு கார்த்திகேயனிடம் இருந்து ஃபோன் வந்தது தேவிக்கே ஆச்சரியமாய் இருந்தது.

'செக்ஷன் சூபர்வைசர் தேவியிடம் பேச வேண்டும்...' என ரிசப்ஷனுக்கு ஃபோன் வர புரியாமல் போனாள்.

மறுமுனையில் கார்த்திகேயன் கம்பீரக் குரலில், "வேலை முடிந்ததும் அலுவலக எதிரில் இருக்கும் காபி ஷாப்பில் கொஞ்சம் காத்திரு. உன்னிடம் முக்கியமான ஒரு விஷயம் பேச வேண்டும்..." என ஏதோ உரிமையுள்ள காதலியிடம் சொல்வது போல் அசால்டாக அவன் சொல்ல, கொதித்து தான் போனாள் அவள்.

"ஹலோ மிஸ்டர்... நீங்கள் கூப்பிடும் இடமெல்லாம் வந்து காத்திருக்க... நான் ஒன்றும் உங்கள்..." அவள் வார்த்தைகளை முடிக்கவில்லை.

"காதலி அல்ல. மனைவியாகப் போகிறவள் என வைத்துக் கொள்ளேன்..." என்றபோது பற்களைக் கடித்தவள், "மிஸ்டர் இப்படி நீங்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் செருப்படிதான் விழும்...!" என்றாள் கோபமாக.

அவள் அப்படி தரக்குறைவாய் சொன்னதும் சட்டென குரலை தாழ்த்திவிட்டான் கார்த்திகேயன்.

ஆனாலும் குறும்பை விடாமல், "மன்னிக்கவும் மிஸ். தேவி அவர்களே. உங்கள் கோபம் எனக்குப் புரிகிறது. ஆனால் நான் சொல்லப் போகிற விஷயத்தைக் கேட்டால் அப்படியே நீங்கள் கொதித்துதான் போவீர்கள். பிறகு உங்கள் அழகான முகம் கோபத்தில் சிவந்து கண்ணெல்லாம் வெளியே பிதுங்கி..."

அவன் நிறுத்த, "சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்..." என்றாள் கருராய்.

"ம்ம்... சொல்கிறேன். எல்லாம் உன் காவியக் காதலன் மிஸ்டர் ஆனந்தனைப் பற்றித்தான்..."

கார்த்திகேயன் 'ஆனந்தன்...' என்றதுமே மின்னல் அடித்தது போல் நின்றாள். கடந்த ஐந்து நாட்களாய் அவளால் ஆனந்தனை சந்திக்க முடியவில்லை. அவன் வேலைக்கும் வரவில்லை.

ஃபோனில் தொடர்பு கொண்டாலும் ஃபோன் அவன் எடுப்பதில்லை. என்னாயிற்று ஆனந்தனுக்கு? ஒரு எட்டு அவன் வீடு வரை போய் பார்த்துவிட்டு வர வேண்டும் என இன்றுதான் நினைத்திருந்தாள்... அதற்கு இவன் என்ன சொல்கிறான்?

ஒருவேளை இந்த கார்த்திகேயனை கண்டால் அவர்களது காதலைப் பிரிக்க ஆனந்தன் மிரட்டி ஆள் வைத்து அடித்து எதுவும் பண்ணிவிட்டானா?

நினைப்பு தோன்ற மறுபடியும் சினமானவள், "ஹலோ ஆனந்தன் எங்கே? எங்கே அவர்? நீங்கள்... நீங்கள் தான் அவரை



எதுவும் கடத்தி... மறைத்து வைத்திருக்கிறீர்களா...? சொல்லுங்கள்? பின் நான் ரொம்பவும் பொல்லாதவளாகி விடுவேன்...!" என தன் ஆத்திரம் முழுவதையும் காட்டிப் பேசினாள்.

மறுமுனையில் கடகடவென அவள் சொல்வதை ரசித்துச் சிரித்தான் கார்த்திகேயன்.

"பொல்லாதவள்...! ஆஹா... இந்தப் பெயர்கூட நன்றாகத்தான் இருக்கிறது..." என மீண்டும் சிரித்துவிட்டு சட்டென நிறுத்தியவன், "சரி... மிஸ்... பொல்லாதவளான தேவி அவர்களே... இன்று மாலை காஃபி ஷாப்பிற்கு நேரில் வாருங்கள்... உங்களைப் போலவே பொல்லாதவனாகிவிட்ட மிஸ்டர் ஆனந்தன் பற்றிய எல்லா விபரங்களையும் புட்டு புட்டு வைக்கிறேன். ஓ.கே.யா...?" என்றபடி அவள் பதிலுக்கு காத்திராமல் ரிசீவரை வைத்துவிட்டான் கார்த்திகேயன்.

குழம்பிப் போனாள் தேவி.

என்ன சொல்கிறான்? ஆனந்தன் பொல்லாதவனாகிவிட்டானா...? இந்த பணத் திமிர் பிடித்த கார்த்திகேயன் ஏதாவது விஷமம் செய்து அவர்களது காதலை நிஜமாகவே உடைத்துவிட்டானா?

மனம் பதைத்தவளாய் இருப்புக் கொள்ளாதவளாய் அன்று மாலை வரை தவியாய் தவித்தாள்.

மாலை வேலை முடிந்ததும் ஹாண்ட் பேக்கைத் தூக்கிக் கொண்டு அலுவலகம் எதிரே இருந்த காபி ஷாப்பிற்குள் அரக்கப் பறக்க நுழைந்தாள்.

காபி ஷாப்பின் ஓரமான இருக்கையொன்றில் தயாராய் அவளுக்காக கார்த்திகேயன் காத்திருந்தான்.

அவசரமும் பதட்டமுமாய் அவள் நுழைந்து தன் எதிரில் உட்கார்ந்ததைப் பார்த்து, "ஆஹா...! எல்லாம்... காதல் படுத்தும் பாடு...!" என கேலியாய் சிரிக்க முறைத்தாள் அவள்.

"மிஸ்டர், சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்...!" என்றாள் அவனிடம் வேறு எதுவும் பேச்சை வளர்க்க விரும்பாதவள் போல்.

மறுபடியும் சிரித்தான் கார்த்திகேயன்.

"சொல்வதற்கு வேறென்ன? வழக்கம் போல் நான் ஜெயித்துவிட்டேன். நீ தோற்றுவிட்டாய்...!"

உள்ளுக்குள் ஏதோ ஒன்று குமிழாய் உடைவது போல் இருந்தாலும் வெளிக்காட்டிக்கொள்ள விரும்பாதவளாய், "என்ன உளறுகிறீர்கள்?" என்றாள்.

"நான் உளறவில்லை! உண்மையைத்தான் சொல்கிறேன். உன் காதல் பணால் ஆகிவிட்டது...!" என்றான் அவன் அமைதியாக.

அவள் பேசாமல் மீண்டும் முறைத்தாள். அவன் விளக்கினான்.

"ஆரம்பம் முதல் சொல்கிறேன். அன்று பெரிதாய் நியாயம் கேட்க வேண்டி ஆனந்தனை என்னிடம் அனுப்பினாயே... ஞாபகம் இருக்கிறதா? கிட்டத்தட்ட ஒரு மாதம் முன்பு... அன்று என் அலுவலகம் வந்து தாம் தீம்மென குதித்த ஆனந்தனிடம் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... நாம் நண்பர்கள் ஆவோம்... என கை குலுக்கினேன். பின் தான் என் வேலையைக் காட்டினேன்..."

அவன் நிறுத்த, "குழி பறிக்கும் வேலை..." என்றாள் அவள் ஆத்திரமாக.

"ம்ம்... அப்படியேகூட வைத்துக் கொள்ளலாம். ஆனால் கண்ணைத் திறந்துகொண்டே குழியில் விழுகிறவர்களை என்ன செய்வது?" என்றான் பதிலுக்கு.

"முதலில் நடந்ததைச் சொல்லுங்கள்..."

"சொல்கிறேன்... முதலில் உன் ஆசைக் காதலன் ஆனந்தனுக்கு வலைவிரித்து அதிக சம்பளத்துடன் இன்னொரு கம்பெனியில் உயர் அதிகாரி வேலை என்று ஆசை காட்டினேன். சம்பளத்துடன் கார், கெஸ்ட் ஹவுஸ் என வசதிகளைக் காட்டினேன். நம்ப முடியாமல் எங்கே? என்றுதான் உன் காதலர் கேட்டார். மறுநாளே எனக்கு ரொம்பவும் வேண்டிய பெரும் தொழிலதிபர் ஒருவரின் கம்பெனியில் அந்த வேலையை



சொன்னபடியே ஆனந்தனுக்கு வாங்கிக் கொடுத்தேன். நம்ப முடியாத அதிசயத்துடன் வாய் பிளந்துவிட்டான் ஆனந்தன்..."

"அப்படியா...? வேறு கம்பெனியில் வேலையா? அவர் என்னிடம் சொல்லவே இல்லையே...?"

தேவி வியப்பாய் கேட்டு திகைக்க கார்த்திகேயன் அடுத்து சொன்ன வார்த்தைகள் அவளை ஒரேடியாய் திடுக்கிட வைத்தது.

"உன்னையே சுழற்றிவிடத் தீர்மானித்துவிட்டவன் இதையெல்லாம் போய் உன்னிடம் சொல்லிக் கொண்டிருப்பானா?" என்றான்.

"என்ன... என்ன சொல்கிறீர்கள்?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். உனது காதலர் ஆனந்தனுக்கு புது வேலை மட்டும் கிடைக்கவில்லை. புது காதலியும் கிடைத்துவிட்டாள். அதுவும் பணக்காரக் காதலி...!"

"பணக்காரக் காதலியா...? நான் நம்பமாட்டேன். நீங்கள் எங்கள் காதலைப் பிரிக்க திட்டம் போட்டு எதுவோ நாடகம் ஆடுகிறீர்கள்..."

கார்த்திகேயன் சிரித்தான்.

"நீ நம்பத்தான் செய்வாய்! உன் இரண்டு கண்களால் பார்த்தால் அதை நம்புவாய்தானே? உன் அருமைக் காதலர் தனது புதுக் காதலியுடன் கொஞ்சிக் கொண்டிருக்கும் காட்சியை இன்றே காட்டுகிறேன்... வருகிறாயா?" என்றான்.

அடுத்த 'அக்ஷயா' நாவலில்

அகிலா கோவிந்த் எழுதும்

திருநிறைச்செல்வி

பரவசமான நாவல்! படிக்கத் தவறாதீர்கள்!

"எங்கு...? சொல்லுங்கள்...!" என்றபடி தேவியும் துடிப்பாய் எழுந்துவிட்டாள்.

"பீச் ஓரமாய் உள்ள க்ரீன் பார்க் ஹோட்டலில் தான் கொட்டமடித்துக் கொண்டிருக்கிறார்கள். உடனே காட்டுகிறேன்... வா!" என்றபடி கார்த்திகேயனும் கிளம்பிவிட்டான்.

தனது பளபளக் காரை அவன் பார்க்கிங்கில் இருந்து வெளியெடுக்க ஏறிக்கொண்டாள் தேவி.

பத்து நிமிட பிரயாணத்திற்குப் பின் க்ரீன் பார்க் ஹோட்டலை அடைந்துவிட்டார்கள் அது.

திறந்தவெளி ஹோட்டல் அது!

உள்ளே நுழைந்து கண்களால் தேடியபோது அந்தக் காட்சி தெரிந்தது.

ஓரமான இருக்கையொன்றில் ஆனந்தன் ஒரு இளம்பெண்ணை தழுவாத குறையாய் அணைத்துப் பிடித்தபடி கொஞ்சிக் கொண்டிருந்தான்!

## 10

தேவி திடுக்கிட்டுத்தான் போனாள்!

கார்த்திகேயன் சொன்னபடியே ஆனந்தன் அங்கு ஒரு இளம்பெண்ணோடு அனைத்துப் பிடித்துக்கொண்டு கொஞ்சிக் கொஞ்சி பேசியபடி!

என்ன இது?

அவள் திடுக்கிட்ட உறைய அவள் தோளைத் தட்டிய கார்த்திகேயன், "நீயே போய் நியாயத்தைக் கேள்!" என்றபடி ஒதுங்கி நின்றுகொண்டான்.



கொதிக்கும் எரிமலை போல் அவன் முன் சீறலாய் போய் நின்றாள் தேவி.

"ஆ...ன...ந்...த...ன்..."

அவள் கோபமாய் கத்தியதற்கு மெல்லவே திரும்பினான் ஆனந்தன். ஆத்திரமாய் நிற்கும், அவளைப் பார்த்து எவ்வித சலனமும் கொள்ளாது சாதாரணமாகவே பார்த்தான்.

"என்ன விஷயம்? எதற்கு வந்தாய்?" என்றான் முகத்தில் எரிச்சல் பரவ.

"யார்... இது? சொல்லுங்கள்!" நேரிடையாய் விஷயத்திற்கு வருபவள் போல் கைகளால் அந்தப் பெண்ணை சுட்டிக்காட்டி கேட்டாள் தேவி.

"அது உனக்குத் தேவையில்லாதது. நீ வந்த விஷயத்தைச் சொல்..." என்றான் அவன் குரல் உயர்த்தி.

தேவிக்கு அவன் கொஞ்சமும் சட்டை செய்யாது பேசிய பேச்சில் பொறுமை போய்க் கொண்டிருந்தது. இருந்தும் இழுத்து வைத்துக் கொண்டு பேசினாள்.

"இதோ பாருங்கள் ஆனந்தன், நம் காதலைப் பிரிப்பதற்காக அந்த கார்த்திகேயன் ஏதோ சதி செய்து வருகிறார். அதில் நீங்களும் பலியாடு போல மாட்டிக்கொண்டு இப்படியெல்லாம் செய்து வருகிறீர்கள்... முதலில் என்னுடன் வெளியே வாருங்கள். நான் விவரமாகச் சொல்கிறேன்..."

அவள் ரொம்பவும் சீரியஸான குரலில் சொல்ல ஆனந்தன் கடகடவென சிரித்தான்.

"பைத்தியம்... லூசு... போல் உளறாதே... நமக்குள் காதலாவது... மண்ணாங்கட்டியாவது...?" என்றாவது அதற்கு மேல் பேச்சை வளர்க்க விரும்பாதவன் போல் தன்கூட இருந்த பெண் பக்கம் திரும்பி, "நிம்மி டியர், நாம் கிளம்புவோம். இங்கு கண்ட கண்ட லூசுகள் வந்து நம் நிம்மதியைக் கெடுக்கிறது..." என்றபடி எழுந்துவிட்டான்.

அந்தப் பெண்ணும் அவன் தோளோடு உரசி நிற்க முடியாதவள் போல் ஆனந்தன் மேல் சாய்ந்துகொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

"ஆனந்தன்...! ஆனந்தன்...!"

அவள் தேவி ஏறக்குறைய கத்தத்தான் செய்தாள்.

அவன் கைகளால், விரட்டுவது போல்.

"போ...! போ...!" என சைகை செய்தபடி அவளைக் கொஞ்சமும் சட்டை செய்யாமல் நடக்க ஆரம்பித்தான்.

அப்படி நடந்து வெளிவந்து ஹோட்டலின் முன் நின்று கொண்டிருந்த பளபள கார் பக்கம் வந்தார்கள். அவன் சொன்ன அந்தப் பெண் நிம்மி கார் கதவைத் திறந்து டிரைவிங் சீட்டில் ஏறிக்கொள்ள பக்கத்தில் வால் போல தொற்றி ஏறிக் கொண்டான் ஆனந்தன்.

நடக்கும் காட்சிகளை நம்ப முடியாமல் பார்த்து ஸ்தம்பித்துக் கொண்டிருந்தாள் தேவி.

கார் கிளம்பிச் சென்றதும் மெல்ல பின்னால் இருந்து நடந்து அவள் பக்கம் வந்தான் கார்த்திகேயன்.

"என்ன மேடம், பார்த்தாயிற்றா?"

அவனது கிண்டல் குரல் கேட்டு திரும்பி அவனை முறைத்தாள் தேவி.

"இப்போது விளக்கம் சொல்லட்டுமா?" என ஆரம்பித்தான் கார்த்திகேயன்.

"மிஸ்டர் ஆனந்தனோடு நீ பார்த்த பெண் பெயர் நிம்மி. பெரிய மில் அதிபரின் ஒரே மகள்... செல்வச் செழிப்பு மிக்க சீமாட்டி..." என்றவன் நிறுத்தி, "அப்படியெல்லாம் ஆனந்தனிடம் சொல்லும்படி நான் தான் அவளை அனுப்பினேன்..." என முடிக்கவும் தேவி திகைத்தாள்.

புருவம் விரித்துப் பார்த்த கார்த்திகேயன் சிரித்தான்.

"புரியவில்லை? நிம்மி எனக்குத் தெரிந்த ஒரு நாடக நடிகை. அவளை வாடகைக்குப் பிடித்து மில் அதிபரின் மகள் போல செட்டப் செய்து ஆனந்தனை வலியப் போய் காதலிக்கும்படி நான்தான் அனுப்பினேன். உன் காவியக் காதலன் ஆனந்தனோ... பணக்காரி... கார்... பங்களா... என சொகுசாய் வாழ்பவள்



என்றெல்லாம் நினைத்து உன்னைத் தேவையில்லை என கடாசிவிட்டு அவளை காதலிக்க ஆரம்பித்துவிட்டான்..."

சர்வ சாதாரணமாய் கார்த்திகேயன் சொல்ல இடி விழுந்தது போல் அதிர்ந்தாள் அவள். என்ன... இவன் சொல்வது உண்மையா? ஆனந்தன்... ஆனந்தன்... நிஜமாகவே... மாறிவிட்டானா? பணக்காரி... என்றதும் எவளோ ஒருவளின் பின்னால் அவளைத் தூக்கி எறிந்துவிட்டு செல்ல ஆரம்பித்துவிட்டானா?

நம்ப முடியவில்லையே!

அவள் திகைக்க, "நீ நம்பும்படி இன்னொரு விஷயமும் சொல்கிறேன்..." என்றான் கார்த்திகேயன்.

"இன்னொரு அதிர்ச்சியா? என்ன அது?"

"ஆனந்தன் உன் கார்மெண்ட் யூனிட்டில் பார்த்த மேனேஜர் வேலையை விட்டுவிட்டான். அவருக்கு இன்னொரு பெரிய கம்பெனியில் ஜெனரல் மேனேஜர் பொறுப்பில் அதிக சம்பளத்துடன் வேலைக்குச் சேர்ந்துவிட்டான்..."

அவள் மறுபடியும் அதிர்ச்சியில் ஸ்தம்பிக்க, "எல்லாம் அடியேனின் கைங்கர்யம்தான்..." என விளக்கினான் கார்த்திகேயன்.

"தேவி, நீ புரியும்படியே சொல்கிறேன். அன்று உன் காதலன் ஆனந்தன் என்னை சந்தித்து நியாயம் கேட்க என் அலுவலகத்திற்கு வந்தான். அன்றுதான் அவனுக்கு மூளைச் சலவை செய்தேன்..."

"மூளைச் சலவையா...?"

"அதான் 'ப்ரெய்ன் வாஷ்' என்று சொல்வார்களே... அதுபோல் அவனிடம் அன்பாகப் பேசி அவன் மூளையின் எண்ணங்களை மாற்றினேன். நான் ஒன்றும் அவனது காதலுக்கு எதிரி அல்ல... தேவிதான் சும்மாவாது ஏதோ சொல்லிக்கொண்டு இருக்கிறாள் என்று கூறி அவனது நட்பை விரும்பும் நண்பன் போல நடித்தேன். ஆனந்தனும் அதை அப்படியே நம்பிவிட்டான். அந்த நட்புக்காக எனக்குத் தெரிந்த கம்பெனி ஒன்றில் சிபாரிசு செய்து அதிக சம்பளத்துடன் ஜெனரல் மேனேஜர் வேலை ஒன்றும்

வாங்கிக் கொடுக்க... ஆனந்தன் என்னை ஒரு பெரிய இரட்சகனாகவே பார்க்க ஆரம்பித்துவிட்டான்.

பின் அவனது 'பணத்துக்கான' சபலப் புத்தியை தெரிந்துகொண்டு நாடக சபாவில் நடிக்கும் நாடக நடிகையை மில் அதிபர் மகள் போல் நடிக்கச் செய்து காதல் வலை வீசச் சொன்னேன். ஆனந்தனும் அப்படியே மயங்கி அவளுக்கு தாசன் போல் ஆகிவிட்டான். நான் நினைத்தது போலவே உன்னைத் தூக்கியெறிந்துவிட்டான்..."

கடகடவென எல்லாவற்றையும் சொல்லி முடித்த கார்த்திகேயன் டக்கென நிறுத்திவிட்டு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

"என்ன தேவி மேடம்... இப்போதாவது உங்களது காதல் தோல்வியை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்றான் குறும்பு பொங்க.

## 11

கார்த்திகேயன் ஆனந்தனைப் பற்றி சொன்ன விஷயங்களை எல்லாம் தேவியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அன்று அப்படியே ஓடி வந்து வீட்டிற்குள் விழுந்துவிட்டாள். கட்டிலில் அமர்ந்து ஒவ்வொன்றாய் யோசித்துப் பார்த்தாள்.

ஆனந்தனைப் பற்றி என்னவெல்லாம் நினைத்திருந்தாள்? இருவரும் கொண்டிருக்கும் அந்த "தொடாத காதல் தான் உண்மையான காதல்... சில சினிமாக்களில் காட்டுவது போல் உரசித் திரியும் விடலைக் காதல் இல்லை என எவ்வளவு பெருமிதம் கொண்டிருக்கிறாள்?

ஆனால்... இன்று இந்த ஆனந்தன் என்னவெல்லாம் சொல்லிவிட்டான்? ச்சீ... போ! என நாயை விரட்டுவது போல் விரட்டுகிறானே? அந்தப் பொல்லாத கார்த்திகேயன் தான்



நினைத்ததை சாதித்து தான் விரும்பியதைப் போல் ஆனந்தனை செய்யவும் வைத்துவிட்டானே?

எப்படி இது சாத்தியம்? பணத்திற்காக... ஆனந்தன் காதலையே தூக்கி எறிந்து விடுவானா? வேலையின் பதவி உயர்வு... கூடுதல் சம்பளம்... மில் அதிபர் மகளின் காதல் என்றதும் ஆனந்தன் எல்லாவற்றையும் மறந்து ஈயென இளித்துக்கொண்டு போய்விடுவானா?

அவ்வளவு பெரிய முட்டாளா இந்த ஆனந்தன்? பணத்திற்கும் பகட்டிற்கும் ஆசைப்பட்டு தன்னையே தொலைத்துவிடும் அளவுக்கு அறிவு இல்லாமலா அவனுக்குப் போயிற்று?

எப்படி இது நடந்தது? இந்த கார்த்திகேயன் திட்டம் போட்டு சொன்ன மாதிரியே அவர்களது காதலை உடைத்துவிட்டானா?

நம்ப முடியாமல் ரொம்ப நேரம் யோசித்தாள் தேவி.

அவளுக்கு கார்த்திகேயன் செய்கை, பேச்சு எல்லாம் பெரும் ஆத்திரத்தைக் கிளப்பியிருந்தது. எவ்வளவு கேவலமாக அவர்களது காதலை நினைத்து உடைத்தும் விட்டான்!

திரும்பவும் திகைத்து யோசித்தவள் ஒரு முடிவிற்கு வர முடியாமல் மறுபடியும் ஆனந்தனை சந்திக்க... சந்தித்து அவனுடன் தெளிவாய் பேச முடிவெடுத்தாள்.

முதற்காரியமாய் தனது கார்மெண்ட் யூனிட்டில் போய் விஷயத்தை விசாரித்தபோது, ஆனந்தன் இரண்டு நாளைக்கு முன்பே தனது மேனேஜர் பதவியை ராஜினாமா செய்திருப்பது புரிந்தது.

அத்தோடு விடாமல் தேவி அவனது புது அலுவலகத்தை தேடிச் சென்றாள். நூல்கள் ஏற்றுமதி செய்யும் பிரபல ஏற்றுமதி கம்பெனி அது. அதில் கார்த்திகேயன் சொன்னது போலவே ஜெனரல் மேனேஜராய் உயர் பொறுப்பில் வேலைக்குச் சேர்ந்திருந்தான் ஆனந்தன்.

ரிசப்ஷனில் சொல்லி அனுமதி பெற்று நடந்தாள். முதல் ப்ளோரில் இருந்த விசாலமான தனியறை ஒன்றில் ஆனந்தன் பொது

மேலாளர் என்ற பளபளப்பு போர்டு. அதன் கண்ணாடிக் கதவுகளை திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். உள்ளே கம்பீரமாய் குஷன் சேரில் ஒய்யாரமாய் சாய்ந்தபடி ஆனந்தன்!

அவளைப் பரிகாசப் பார்வை பார்த்தபடி, "நீயா? எதற்கு இங்கு வந்தாய்?" என்றான் எரிச்சலாய் எடுத்த எடுப்பில்,

என்ன நான் வருவது தொந்தரவா? அந்த அளவிற்குப் போயிற்றா? என அவள் திகைத்துப் பார்க்க, "சொல்ல வந்ததை சீக்கிரமாகச் சொல்! எனக்கு நிறைய வேலை இருக்கிறது!" என்றான் அதே கடுகடுப்புடன்.

இது நம்மை காதலித்த முகம் தானா? இந்த சிடுசிடு மூஞ்சையா நாம் காதலித்தோம்? என தேவியே ஒரு கணம் அதிர்ச்சியாய் நினைக்கத் தான் செய்தாள்.

இருந்தும் சுதாரித்து, "ஆனந்தன் இங்கு என்ன தான் நடக்கிறது? ஏன் திடீரென இப்படி மாறிவிட்டீர்கள்...?" என்றாள்.

அவன் பதிலுக்கு அவளை உட்காரகூடச் சொல்லாமல் கடகடவென சிரித்தான்.

"நொடிக்கு நொடி... இந்த உலகமே தன்னைத் தானே சுற்றிக்கொண்டு மாறி வருகிறது. நான் மட்டும் மாறக்கூடாதா?"

ஏதோ பெரிய ஒரு உவமையை காட்டிவிட்டது போல் திரும்பவும் ரசித்துச் சிரித்தான்.

"ஆனந்தன், எனக்கு காரணத்தைச் சொல்லுங்கள்!" என்றாள் அவள் கறார்க் குரலில்.

"என்ன காரணம்? எதைக் கேட்கிறாய்?" என்றான் அவன் தெரியாதது போல்.

அவனது செய்கையைக் கண்டு முறைத்தவள், "புரியவில்லை...? உங்களது புது வேலை... புதிய காதலை?" என்றாள் சீறும் குரலில்.

"ஓ... அதைச் சொல்கிறாயா?" என்றவன், "எல்லாம் அந்த மூன்றெழுத்து... மாயை... பணம்...!" என்றான்.

"பணத்துக்காக நீங்கள் மயங்கிவிட்டீர்களா?"



அவன் மறுபடியும் ஒரு கடகட சிரிப்பை சிரித்தான்.

"சரியான முட்டாள் மாதிரி பேசுகிறாய்...? இந்த பரபரப்பான உலகத்தில் பணம்தான் முக்கியம். எல்லாவற்றுக்குமான மூல காரணமாய் விளங்கும் அட்சாரம். அந்தப் பணமும் அதிர்ஷ்டமும் ஒரு சேர என்னைத் தேடி வரும் போது நான் ஏன் மறுக்க வேண்டும்? அதான் தாவிப் போய் அப்படியே அணைத்துக் கொண்டேன்..."

அவன் சொல்லி முடிப்பதற்குள், "எல்லாம் அந்த கார்த்திகேயன் செய்யும் சூழ்ச்சி. நம்மைப் பிரிப்பதற்காக அவன் போடும் நாடகம்..." என அவள் கத்தலாய் கூற, அதற்கும் பதிலடி கொடுத்தான் அவன்.

"இருக்கட்டுமே! அப்படி நாடகம், வேஷம்... சூழ்ச்சி... என எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள். ஆனால்... அதனால் எனக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறதே... அதற்கு என்ன சொல்கிறாய்? இதோ நான் அனுபவிக்கும் இந்த சொகுசான வேலை உண்மைதானே? என்னை தானாய் தேடி வந்து காதலிக்கும் அந்தப் பெண்... நகரின் பெரிய மில் ஓனர் மகள்... அதுவும் நிஜம்தானே...? பின் நான் எதற்கு தயங்க வேண்டும்? வலிய என் காலடியில் வந்து விழும் சொர்க்கத்தை ஏன் உதறித் தள்ள வேண்டும்? அதான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன். உன்னை கை கழுவி விட்டேன். இப்போது புரிந்ததா?"

அவளது சிவந்த கண்களின் முறைப்பை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் கதை போல் சொல்லி முடித்தான் அவன்.

நிமிர்ந்து அவன் முகத்தை நன்கு உற்றுப் பார்த்தாள் தேவி.

அதில் கொஞ்சமும் நியாயமோ இரக்கமோ இல்லாமல் வடுகட்டிய விஷமத்தனமே எதிரொலித்தது.

இவனிடம் இனிப் பேசி பிரயோஜனமில்லை என்ற முடிவிற்கு வந்தவளாய் முகத்தை வெட்டித் திரும்பியவள் விடுவிடுவென அங்கிருந்து நடக்க ஆரம்பித்தாள்.

அவள் கோப கொந்தளிப்பில் அப்படிப் போவதை அலட்சியமாய் பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

# 12

வீட்டிற்கு வந்து வெகு நேரமாகியும் தேவியின் ஆத்திரம் அடங்கவில்லை. ஆனந்தன் அப்படி பேசியதைவிட அவன் அப்படி பேசுவதற்கான காரணம் கார்த்திகேயன். கார்த்திகேயன் தான் அவனை அடியோடு மாற்றிவிட்டான் என ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அதுவரை ஆனந்தன்தான் தனது எதிர்காலம்... வாழ்க்கைத்துணை என்று எண்ணி வைத்திருந்ததெல்லாம் திடீரென ஒரே நாளில் தூள் தூளாகப் போனதும், அவளுக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

அந்த அதிர்ச்சியை, வருத்தத்தைக்கூட, இப்படி பணத்திற்காக பச்சோந்தியாய் மாறும் முதுகெலும்பில்லாத கோழையை கட்டுவதைவிட தப்பித்ததே மேல் என்ற எண்ணத்தினால் சரி செய்துவிடலாம். நிம்மதியடைந்து விடலாம்.

ஆனால் கார்த்திகேயன்...?

அவனது விஷயம்...?

அவனது பண பலத்தால் வீட்டில் உள்ள அனைவரையும் வளைத்துப் போட்டவன், சொன்னபடியே அவனது பணபலத்தால் அவளது காதலையும் உடைத்துவிட்டானே...?

தான் நினைத்ததை எப்படியாவது அடைய வேண்டும் என்கிற வெறியா? எதையும் பணத்தால் சாதிக்க முடியும் என்கிற பணத்திமிரா?

இரண்டும் ஒன்றுதானே!

அதுதானே கார்த்திகேயனின் குணமாய் மூர்க்கத்துடன் அவனைப் பிடித்து ஆட்டுகிறது...?

இப்போது என்ன செய்ய?



கைகளைப் பிசைந்தபடி யோசித்தாள் அவள்.

ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாய் அவளுக்குப் புரிந்தது

கார்த்திகேயனின் குறி அவள்தான். அவளை மணப்பதுதான்!

அதற்காகத்தான் நிதானமாய் காய்களை நகர்த்தியிருக்கிறான். வீட்டு உறுப்பினர்களை எல்லாம் தன் பணத்தைக் காட்டி அன்பால் தான் தருவது போல் வசப்படுத்திவிட்டான்.

என்ன... தேவியிடம் அவனது நடிப்பு அவனது பாச்சா பலிக்கவில்லை.

அப்படி பலிக்கவில்லை என்றதும் தனது உண்மை நிலையைக் காட்டி மிரட்டுகிறான். எப்படியும் உன்னை பணிய வைப்பேன். எனது நினைப்புப்படி சம்மதிக்க வைப்பேன் என்பது போல் சூழ்ச்சிகள் செய்து அவளது காதலையும் உடைத்துவிட்டான்.

இனி அவளுக்கு வேறு என்ன வழி? என நினைத்துவிட்டான்.

காதல் தோல்வியை ஒப்புக்கொண்டு அவனை மணக்க தலையாட்டி விடுவாள் என நினைத்துவிட்டான்.

முட்டாள் கார்த்திகேயன்!

சரியான... முட்டாள்...! முட்டாள்தான்...!

தனக்குத்தானே கொதிப்பாய் யோசித்துக் கொண்டிருந்தவள் அந்த வேகத்தில் கடைசியில் தோன்றிய வார்த்தைகளை உரக்கவே உச்சரித்துவிட்டாள்.

அந்த நேரம் பார்த்தா கார்த்திகேயன் அங்கு வரவேண்டும்?

"அட... உன் பெயரை நீயே ஏன் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறாய்?"

குறும்பும் கேலியுமாய் திடீரென அவனது குரல் தன்னை நோக்கி வந்ததும்தான் உணர்வுக்கு வந்தாள்.

எதிரில் சிரித்தபடி கார்த்திகேயன்!

அப்போதுதான் தான், 'முட்டாள்' என உச்சரித்ததையும் அதையே வைத்து அவன் கேலி செய்வதையும் உணர்ந்தாள்.

இருந்தாலும் அடக்கிக்கொண்டு, 'நீங்கள் பெரிய புத்திசாலிதான் மிஸ்டர். நான் ஒத்துக் கொள்கிறேன்...' என்றாள் முறைப்புடன்.

"புரிந்துகொண்டால் சரி..." என்ற கார்த்திகேயன் தலையை சற்று குனியவைத்து அவள் முகத்தை நன்கு உற்றுப் பார்த்தான்.

"என்ன அம்மணி... காதல் மயக்கம் தீர்ந்ததா? இல்லை... இன்னும் ஆனந்தன் மீதான ஆனந்த மயக்கம் தொடர்கிறதா?" என்றான்.

அவள் பேசாமல் முறைத்து உதடுகளை அழுந்தக் கடிக்கவும் கார்த்திகேயன் விடாது, "இப்படியெல்லாம் கோபம் கொள்ளக்கூடாது. ஃமிஸ் தேவி. சொல்லப் போனால் இப்படி ஒரு முதுகெலும்பில்லாத பச்சோந்தியை காதலித்தது தவறு என புரிய வைத்து எனக்கு நன்றி அல்லவா சொல்ல வேண்டும்? பின் இப்படி உதடு துடிக்க கோபப்பட்டால் எப்படி?" எனக் கேட்க வெறுப்பாய் முகத்தை திருப்பினாள் அவள்.

அதை கார்த்திகேயன் ரசிப்பது போல் பார்த்தவன், "ஓ.கே. தேவி! இப்போது விஷயத்திற்கு வருகிறேன். இனி என்னை மணக்க தடை சொல்லும் அளவுக்கு உன்னிடம் வேறு எதுவும் காரணங்கள் இருக்கிறதா? அப்படி இருந்தால் அதை உன் திருவாயால் சொல்ல முடியுமா? கேட்கத் தயாராக இருக்கிறேன்... நான்...!" பெரும் பவ்யம் காட்டி சொல்வது போல் சொல்லி அடக்க முடியாத சிரிப்பொன்றை உதிர்த்தான் கார்த்திகேயன்.

அவனது சிரிப்பும் அந்தப் பேச்சும் அவளுள் பெரிதும் ஆத்திரத்தைக் கிளறியது. அதனாலே, "பாழும் கிணற்றில் விழுந்தாலும் விழுவேனே தவிர உங்களை கட்டிக்கொள்ள மாட்டேன்" என்றாள்.

அதற்கும் அவன் அதிர்வாய் சிரித்து, "அப்படியானால் அதிலும் உனக்கு தோல்விதான். பாழும் கிணறு இந்த ஊரில் கிடையாதே!" என்றான்.

"மிஸ்டர்..." அவள் குரலை உயர்த்தினாள்.

"என்ன?"



"உங்களை ஒரு போதும் கட்டிக்கொள்ளமாட்டேன். அந்த எண்ணத்தை மறந்துவிடுங்கள்..."

"அதான் ஏன் என்று கேட்கிறேன்?"

"உங்களைப் பிடிக்கவில்லை! பணத்தால் எதையும் சாதிக்க முடியும் என ஆணவமாய் நினைக்கிற உங்களது பணத் திமிரை எனக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை! காரணம் போதுமா?" என்றாள்.

முகத்தில் எரிச்சல் பரவ அவள் சொல்லியவிதமும் அவள் காட்டிய அளவுக்கதிகமான வெறுப்பும் அவனை திகைக்கவே வைத்தது.

"என் மீது இவ்வளவு பொறுப்பு உனக்கு...?" என வாய்விட்டே கேட்டவன் தொடர்ந்து, "அப்படி என்னம்மா உனக்கு நான் செய்துவிட்டேன்? உன் தந்தைக்கு புத்தகங்கள் கொடுத்தேன். வேலை வாங்கி கொடுத்தேன். உன் தம்பி தங்கைகளுக்கு அவர்கள் நெடுநாள் ஆசைப்பட்ட விஷயங்களை மனமுவந்து நிறைவேற்றி வைத்தேன். முதுகெலும்பில்லாத பச்சோந்தியாய் இருந்தவனை காதலித்த உனக்கு அவனது உண்மை நிலையை புரிய வைத்தேன். இதுவெல்லாம் உன் கண்களுக்கு நன்மைகளாக தெரியவில்லையா?" என்றாள்.

அவள் முகம் வெட்டித் திரும்பி அமைதியாய் அவனைப் பார்த்தாள்.

"நன்மைகள்தான். ஆனால் இதுவெல்லாம் செய்ய நீங்கள் யார்?" என்றாள்.

"நான்... நான்..." சொல்ல ஆரம்பித்த கார்த்திகேயன் முதல்முறையாய் தடுமாறினான்.

அவன் திணறலை பார்த்து உற்சாகம் கொண்டவள் போல் கைகளை சொடுக்கினாள் அவள்.

"பார்த்தீர்களா? சட்டென சொல்ல முடியவில்லை இல்லையா? இதுதான் இப்போது பிரச்சனையே! யாரோ முன் பின் தெரியாத மூன்றாம் நபர் எதையோ எங்கள் குடும்பத்தில் எதிர்பார்த்து உதவிகள் செய்தால்... எப்படி? அதை எப்படி ஏற்றுக்

கொள்ள முடியும்? அதனால்தான் முடியாது. அந்த எண்ணத்தை மறந்துவிடுங்கள் என்கிறேன்..."

அவள் ஆவேசமாய் மீண்டும் சொன்னதைப் பார்த்து சற்று அரண்டவன் போல் மீண்டும் அமைதியானான் அவன்.

சற்று நிமிடம் அமைதியாகவே கழிந்தது.

மௌனத்தை மெல்ல உடைத்தான் அவன்.

"இதுதான் உன் முடிவா?"

"இன்னுமா அது உங்களுக்குப் புரியவில்லை?" குரலை மறுபடியும் உயர்த்தினாள் அவள்.

"புரிகிறது. அதில் மாற்றம் எதுவும் உண்டா என்பதை கடைசியாய் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்...!"

குரலில் சற்று மென்மையை தடவி அவன் சொல்ல, "ம்ஹும்...!" என தோள்களை குலுக்கி அலுத்தவள், "அட! பாழும் கிணற்றில் விழுந்து சாவதற்குகூட துணிந்துவிட்டேன் என்கிறேன். இன்னும் எரியாத டியூப் லைட் போல் மாற்றம், கடைசி அபிப்பிராயம் என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி?" என்றாள் அலட்சியமாய் அவனை பரிகாசப் பார்வை பார்த்தபடி.

முதல் முறையாய் கார்த்திகேயன் கோபமாகி முகம் இறுகினான். சட்டென அதே உஷ்ணத்தோடு, நிமிர்ந்து, "ஹலோ, இவ்வளவு தூரம் பேச்சு வந்தாயிற்று அல்லவா...? இனி பிரயோஜனமில்லை. நான் உன்னை மணக்க நினைத்த என்னோட முயற்சியை அடியோடு கைவிட்டு விடுகிறேன். ஆனால் அதற்கு முன்..."

நிறுத்திவிட்டு அவளையே முறைத்தான். அவளும் பதிலுக்கு முறைத்தவாறு, என்ன? என்பது போல் பார்த்தாள்.

"நீ... பைசல் பண்ண வேண்டிய கணக்குத் தீர்க்க வேண்டிய சமாச்சாரம் ஒன்று இருக்கிறது..."

பீடிகைக் குரலில் அவன் சொல்ல புரியாமல் அவனைப் பார்த்தாள்.

அவன் ஒரு நிமிடம் அவள் பார்த்த அதே பரிகாசப் பார்வையை அவளை நோக்கி வீசினான். பின் திடமான குரலில்,



"உன் குடும்பத்திற்காக... நான் செலவழித்தேனே...? அந்தத் தொகை...! எல்லாவற்றுக்கும் கணக்கு வைத்திருக்கிறேன். கிட்டத்தட்ட மூன்று லட்ச ரூபாய்...! அதில் ஒரு பைசா குறையாமல் எனக்கு திரும்பி வர வேண்டும். வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் நடப்பதே வேறு!"

சுட்டு விரலைக் காட்டி மிரட்டலோடு அவன் எச்சரிக்க அதைக் கொஞ்சமும் எதிர்பாராத அவள், முதல்முறையாய் திகைப்பில் அரளத்தான் செய்தாள்.

## 13

தேவி தன் வீட்டிற்கு வந்து ஒரு மணி நேரம் ஆகியிருந்தது.

வந்தவள் ஹாண்ட் பேக்கை தூக்கிப் போட்டுவிட்டு கட்டிலில் பொத்தென அமர்ந்துவிட்டாள்.

கார்த்திகேயன் சொன்ன விஷயங்களை அவளால் கொஞ்சமும் ஜீரணிக்க முடியவில்லை!

என்னவெல்லாம் சொல்லிவிட்டான்?

அவள் குடும்பத்திற்காக... அவன் இதுவரை மூன்று லட்சம் வரை செலவழித்திருக்கிறானாம். அதை கொடுத்துவிட வேண்டுமாம்...!

என்ன இது அநியாயம்?

அவள் ஏறக்குறைய கத்தத்தான் செய்தாள்.

அவனோ அதைக் கொஞ்சமும் சட்டை செய்யாது, "எல்லாவற்றுக்கும் சரியான கணக்கு வைத்திருக்கிறேன்... சொல்லட்டுமா?" என்று ஆரம்பித்த பின், "உன் தந்தைக்கு கொடுத்த புத்தக அன்பளிப்புகளுக்கு பத்தாயிரம், அவருக்கு சங்க நூலகத்தில் நூலகர் வேலைக்கு லஞ்சமாய் ஒரு லட்சம், உன் தங்கை கம்ப்யூட்டர் கோர்ஸ்க்கு ஐம்பதாயிரம், உன் வீட்டு மளிகைச் செலவு வகையறாக்கள், துணிமணிகள், உன்

தம்பிகளுக்கு சைக்கிள்கள், விளையாட்டுப் பொருட்கள் என அதில் ஒரு ஐம்பதாயிரம், உன் முதுகெலும்பில்லாத காதலனுக்கு வேறு ஒரு உயர் பதவி வேலை வாங்கிக் கொடுக்க ஒரு லட்சம் என சரியாக மூன்று லட்ச ரூபாய்கள் செலவாகி இருக்கிறது...'' என முடித்தான்.

அவள் உள்ளுக்குள் அதைக் கேட்டு இலகுவாய் அதிர்ந்தாலும் வெளிக்காட்டாது அலட்சியமாய் தோள்களை குலுக்கினாள்.

''நீங்கள் செலவழித்தது சரி. என்னைக் கேட்டா செலவழித்தீர்கள்?'' என்றாள் தன் பயத்தை அடக்கிக்கொண்டு.

''உன்னைக் கேட்டு செலவழிக்கவில்லை. ஆனால் உனக்காகத்தானே செலவழித்தேன். அது உனக்குத் தெரியும்தானே?''

''அதற்காக... நான் எப்படி பொறுப்பாக முடியும்...?''

மறுபடியும் அலட்சிய தலையசைப்புடன் அவள் மறுக்கப் போக அவசரமாய் குறுக்கிட்டான் அவன்.

''நீ தான் முழு பொறுப்பு. உனக்காக உன்னை மணப்பதற்காகத்தான் செலவழித்தேன். நீயும் ஆரம்பம் முதல் அதைக் கண்டுபிடித்துதான் என்னை எச்சரித்தாயே... அதற்குள் அதை மறந்துவிட்டாயா...?''

அவன் சொன்னதும் கரெக்ட்டான பாயிண்ட்டை பிடித்தது போல், ''ஆமாம்... அப்படி எச்சரித்தேன் அல்லவா...? அப்போதே செலவழிப்பதை நிறுத்தி விலகியிருக்கலாம்தானே?'' என்றாள்.

அவன் கார்த்திகேயன் லேசான தலையசைப்புடன், ''விலகியிருக்கலாம்தான். ஆனால் மனதுள் நீ கிடைப்பாய் என்ற நம்பிக்கை மழுங்காமல் துளிர் விட்டுக் கொண்டிருந்தது. அதனால் தொடர்ந்து முயற்சி செய்தேன். அது ஒன்றும் தப்பில்லையே?'' என்றபடி கைகளை விரித்தான் அவன்.

''தப்பில்லைதான். அதுபோல் உங்கள் எண்ணப்படி நடக்காமல் போனதும் தப்பில்லை தான்! அதையும்



புரிந்துகொள்ளுங்கள்!'' என்றபடி வேண்டுமென்றே அவனைப் போலவே கைகளை விரித்துக் காட்டினாள் அவள்.

கார்த்திகேயன் திரும்பி நேருக்கு நேராய் அவளைப் பார்த்து உதடுகளை சிலுப்பினான். ''கெட்டிக்காரத்தனமாக பேசுவதாய் நினைப்பு ஓடுகிறதா? முதலில் அதை மாற்றிக்கொள். நான் நியாயமாய்த்தான் பேசுகிறேன். நியாயமாய்த்தான் கேட்கிறேன். உன் மேல் ஏற்பட்ட அன்பால், நீ கிடைப்பாய் என்ற ஆசையில் பணத்தை தண்ணீராய் செலவழித்தேன். ஆனால் நீயோ அது முடியாது. முடியவே முடியாது என்று மறுத்துவிட்டாய். என்னையும் மூன்றாம் நபர் நீங்கள். எதற்காக என் குடும்பத்திற்கு செலவழிக்க வேண்டும் என்று வரை கேட்டுவிட்டாய். பின் இனி எதற்கு நீ தயங்க வேண்டும்? தாமதிக்க வேண்டும்? அந்த உனக்குப் பிடிக்காத மூன்றாவது நபர் உனக்காக, உன் குடும்பத்திற்காக செலவு செய்த பணத்தை உடனே திருப்பிக் கொடுப்பதுதானே நியாயம்? நீயே சொல்!''

மறுபடியும் சுட்டு விரலைக் காட்டி அவன் சொன்னபோது பதில் சொல்ல முடியாமல் அவள் திணறத்தான் செய்தாள்.

''அது... அது...''

அவளது திணறலை பொருட்படுத்தாது அவன் தொடர்ந்தான்.

''இதோ பார் தேவி, நான் பிசினஸ் மேன். நான் செலவழிக்கிற ஒவ்வொரு நயா பைசாவிற்கும் எனக்கு பலன் கிடைத்தாக வேண்டும். அதற்கு உரிய கணக்கு வந்தாக வேண்டும். சும்மா போனால் போகிறது என்றெல்லாம் பணத்தை விட்டுவிட்டு போக என்னால் முடியாது. அதனால்... எனது பணம் மூன்று லட்சம் எனக்கு வந்தாக வேண்டும். எப்போது எப்படித் திருப்பித் தரப் போகிறாய் நீ...?''

கைகளை கட்டிக்கொண்டு முன்னால் வந்து அவன் அதிகாரமாய் கேட்டபோது ஆடித்தான் போனாள் அவள்.

இருந்தாலும் அவன் முன்னால் தனது பயத்தை கொஞ்சமும் வெளிக்காட்ட விரும்பாதவளாய், ''அது... அது...'' என மீண்டும்

திணறியவள், "அப்படி நான் கொடுக்காவிட்டால், கொடுக்க மறுத்தால் என்ன செய்வீர்களாம்?" என்றாள் வீறாப்பு வந்தவளாய்.

அவன் முகம் சுருங்கியவன் பின் இறுக்கம் தளர்ந்து விஷமமாய் சிரித்தான்.

"மறுத்தால் விட்டுவிடுவேனா? உன் குடும்பத்தின் மீது, முக்கியமாய் உன் தந்தை மீது போலீசில் புகார் செய்வேன். என்னிடம் வேலைக்காக கடனாய் ஒரு லட்ச ரூபாய் வாங்கி மோசடி செய்துவிட்டதாய் கூறி கம்பி என்ன வைப்பேன். அது போதாதா உனக்கு...? பயந்து விழுந்தடித்துக்கொண்டு பணத்தைக் கொண்டு வந்துவிடமாட்டாய்?"

சர்வ சாதாரணமாய் அவன் சொல்ல சப்தநாடி ஒடுங்கிவிட்டாள் அவள். பாவி, வாய் கூசாமல் என்னவெல்லாம் சொல்லிவிட்டான்? அவன் சொல்லிய தோரணையும், அவன் முக இறுக்கத்தையும் பார்த்தவள், இவன் அப்படிச் செய்தாலும் செய்வான் என அரளத்தான் செய்தாள்.

அவள் ஸ்தம்பித்து நிற்பதை சுற்றி வந்து கூர்ந்து பார்த்தான்.

"என்ன அப்படியே விழித்துக்கொண்டு நிற்கிறாய். எனக்கு பதில் சொல்...!" என விரட்டலாய் உறுமினான்.

அவள் தயக்கமாகவே உளறினாள்.

"அது... அது... என்னிடம் அவ்வளவு பணம் இல்லை..."

"பணம் இல்லையென்றால் விட்டுவிட முடியுமா? எப்படியாவது ஏற்பாடு பண்ணிக்கொடு...!"

"எப்படி முடியும்? நானோ மாதச் சம்பளம் பத்தாயிரம் வாங்குகிறேன். அதில் எப்ப்டி...?" என இழுத்தவள் சட்டென் பிரகாசமாகி,

"வேண்டுமானால் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் கொடுத்து உங்கள் கடனை அடைக்கிறேன்..." என முடித்தாள்.

"மாதம் ஆயிரம் ரூபாய்? அப்படி நீ கொடுத்து நான் வாங்கி கடன் தீர்க்க வேண்டுமென்றால் அதற்குள் நீ கிழவி ஆகிவிடுவாய்... தெரியுமா?" என்றான்.



"பின் நான் என்னதான் செய்வது?" மறுபடி அவள் முன் வந்து அவள் முகத்தருகே சொடுக்கிட்டான்.

"நன்கு யோசி. இரண்டு நாள் டயம் தருகிறேன். வழியைக் கண்டுபிடி...!"

சொல்லிவிட்டு வந்த வேகத்திலேயே அகன்றும்விட்டான்.

வீட்டிற்கு வந்து எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தவளுக்கு மூச்சுதான் வாங்கியது.

என்னவெல்லாம் நடந்துவிட்டது?

முதலிலே யோசித்திருக்க வேண்டாம்? அப்பாவின் பழைய மாணாக்கன் போல் அந்த கார்த்திகேயன் வீட்டினுள் நுழைந்து பணத்தை தன் குடும்பத்திற்கு செலவழிக்க ஆரம்பித்த போதே தடுத்திருக்க வேண்டாம்?

வீட்டு உறுப்பினர்களையும் எச்சரித்து... வேண்டாம் இது... பின்னால் ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும் என எச்சரித்திருக்க வேண்டாம்.

யார் கேட்டார்கள் அவள் பேச்சை...? அப்பா... அம்மாவில் இருந்து தம்பி, தங்கைகள் வரை எல்லோரும் பல்லிளித்துக்கொண்டு அல்லவா அவன் கொடுத்த பரிசுகளை வாங்கினார்கள்?

அதுமட்டுமில்லையே...! அவர்களுக்கு அவனது நோக்கம்கூட ஒரு கட்டத்தில் தெரிந்து போயிற்றே!

அந்த நோக்கத்தையும்கூட இந்த கெட்டிக்கார கார்த்திகேயன் அவர்களது வாய் மூலமாகவே வரும்படி செய்து வரவழைத்தும் விட்டானே!

'மாப்பிள்ளை...' என அம்மா அவனை ஒருநாள் வாய் நிறைய அவள் காதுபட கூப்பிட்டபோது அன்று அவள் ஆடிய ஆட்டம் இன்றும் நினைவில் இருக்கிறது.

ஆனால் என்ன... என்ன... பிரயோஜனம்? எதையும் அவளால் தடுக்க முடியவில்லையே!

எல்லாமே அவள் கையை மீறிப் போய்விட்டதே!

வீட்டில் விஷயத்தைச் சொல்லலாம்.

ஆனால்...

கரும்பு தின்ன உனக்கு கசக்கவா செய்கிறது? பேசாமல் அந்த கார்த்திகேயனை கட்டிக்கொள்... என்று சொல்லிவிட்டால்?

சொல்லிவிட்டால்... என்ன... கண்டிப்பாய் சொல்வார்கள்!

ஆக... இந்தப் பிரச்சினையை கொஞ்சமும் வீட்டுக்குத் தெரியாமல் தனியாளாக் நின்று தான் சமாளிக்க வேண்டும்.

அப்போதுதான் விஷமக்கார கார்த்திகேயனிடம் இருந்து அவள் தப்பிக்கவும் முடியும்!

யோசிக்க ஆரம்பித்தாள் தேவி.

## 14

மூன்று நாட்கள் கழித்து அலுவலக இடைவேளையில் அவளை சந்திக்க வந்தான் கார்த்திகேயன்.

தனது அலுவலக கேண்டினுக்கு கூட்டிப் போய் உட்கார வைத்தாள்.

எடுத்த எடுப்பிலேயே, "என்ன யோசித்தாயா? என்ன செய்யப் போகிறாய்?" என்றான்.

அவள் தயக்கமான பார்வை பார்த்தபடி, "வேறு வழியில்லை. சம்பளத்திலிருந்து மாதம் மாதம் ஆயிரம் ரூபாய்..." என ஆரம்பித்து அவள் முடிப்பதற்குள் இடைவெட்டினான்.

"அது நடக்காத காரியம். கொஞ்சம் யோசித்துப் பார். மாதம் ஆயிரம் என்றால் வருடத்திற்கு பன்னிரண்டாயிரம். பத்து வருடங்களுக்கு ஒரு லட்சத்து இருபதாயிரம்... அப்படி கணக்குப் பார்த்தால் மூன்று லட்ச கணக்கையும் நீ அடைக்க இருபத்தைந்து வருடங்கள் ஆகும். அது எப்படி சாத்தியமாகும். அதனால்..."

"சொல்லுங்கள்..."



"நான் ஒரு வழி சொல்கிறேன்... அதன்படி நடக்கிறாயா?" என்றான்.

"என்ன வழி...?"

"சொல்கிறேன். அதற்கு முன் நான் கேட்கும் சில கேள்விகளுக்கு பதில் சொல்கிறாயா?"

அவன் இயல்பாய் கேட்ட விதம் அவள் கோபத்தை குறைத்தது போலும். அதனாலே அவளும் தன்னை சாதாரணமாக்கிக்கொண்டு, "கேளுங்கள்..." என்றாள்.

"நீர் கார்மெண்ட் யூனிட்டில் செக்ஷன் சூபர்வைசராகத்தானே வேலை பார்க்கிறாய்?"

"ஆமாம்..."

"உனக்கு கார்மெண்ட் யூனிட்டின் தயாரிப்பு, டிசைனிங், ஆர்டர் பிடிப்பது, எக்ஸ்போர்ட் செய்வது போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் ஏதும் அனுபவம் உண்டா?"

"உண்டு..." என பலமாய் தலையாட்டிய தேவி. நான் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாய் அந்த கார்மெண்ட் யூனிட்டின் ஒவ்வொரு பிரிவிலும் பணியாற்றிய அனுபவங்களை அவனிடம் விவரித்தாள்.

எல்லாவற்றையும் கூர்ந்து கேட்ட கார்த்திகேயன், பின் சட்டென அந்தக் கேள்வியைக் கேட்டான்.

"நீ... புத்திசாலியா... அல்லது... முட்டாளா?" என்றான்.

அந்தக் கேள்வியை சற்றும் எதிர்பாராதவள் திடுக்கிட்டே அவனைப் பார்த்தாள்.

"இதற்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என நினைக்கிறீர்கள்?" என்றாள் குரலை உயர்த்தி.

"ம்ம்... கோபப்படாதே... காரணமாகத்தான் கேட்கிறேன்..." என்ற கார்த்திகேயன், "நீ... புத்திசாலி என்றால் இதற்குள் உன் சூபர்வைசர் வேலையை விட்டுவிட்டு சொந்தமாக

அல்லவா ஒரு கார்மெண்ட் யூனிட் ஆரம்பித்திருக்க வேண்டும்..." என்றான்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். கார்மெண்ட் தொழில் பற்றி அத்தனை விஷயங்களும் தெரிந்து வைத்திருக்கிறாய்... நல்ல அனுபவமும் கொண்டிருக்கிறாய்... இன்னமும் மாதச் சம்பளத்தை வாங்கிக்கொண்டே வாழ்க்கையை ஓட்டிவிடலாம் என முடிவெடுத்துவிட்டாயா? சொந்தமாக தொடங்க வேண்டும்... வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற எண்ணமெல்லாம் உனக்கு ஏற்படவில்லையா...? யோசித்துச் சொல்...!"

மறுபடியும் சுட்டு விரலைக் காட்டி அவன் தீர்க்கமாய் பேசியபோது, உண்மையிலேயே, தான் ஏன் இவ்வளவு நாளும் அந்தக் கோணத்தில் யோசிக்கவில்லை? என எண்ணி அதிரத்தான் செய்தாள்.

அவன் சொல்வது சரிதானே? கார்மெண்ட் தொழில் பற்றி அத்தனை விஷயங்களும் தெரிந்த நாம் துணிந்து சொந்தமாய் ஆரம்பிப்பது பற்றி யோசித்திருக்கலாமே?

"நீங்கள் சொல்வது சரிதான்! இதுவரை அப்படி நான் யோசித்துப் பார்க்கவில்லை..." குனிந்தபடி தலையாட்டினாள் அவள்.

"இனி யோசி...!" என்றான் அவன்.

"ஆனால் பணம்... வேண்டுமே...? கிட்டத்தட்ட... லட்சங்கள்...! தோராயமாக... ஒரு பத்து லட்ச ரூபாய்...? அதற்கு எங்கு போவது?"

அவள் வியப்பாய் கேட்க, அவன் அமைதியாய், "வேறு எப்படி? பேங்க் லோன்தான்! தொழில் தொடங்க உரிய ஆவணங்களை காட்டினால் எத்தனையோ வங்கிகள் கடன் தர



தயாராய் இருக்கின்றன. நீ தான் முயற்சி செய்ய வேண்டும் செய்கிறாயா?" என்றான்.

அவன் ஏதோ நினைப்பில் மறுபடி தலையாட்டப் போனவள் பொறி தட்டியது போல் நிமிர்ந்து கேட்டாள்.

"அதாவது எப்படி பேங்க் லோன் வாங்கி சொந்த யூனிட் ஒன்று தொடங்கி உங்கள் கடனை அடைப்பதற்காக..."

"ஆமாம்! அதிலென்ன சந்தேகம்?"

"ஓஹோ..." என தலையாட்டியவள், "இப்போது புரிகிறது. சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை. என்னடா நம் மீது இவ்வளவு அக்கரை இவ்வளவு கரிசனம் ஏன் என்று புரிகிறது..." என்றாள் கண்களைச் சுழற்றி ஒரு அலட்சிய பார்வையுடன்.

அவனும் அதே அலட்சியத்தோடு அவளைப் பார்த்தான்.

"பின்... வேறு எப்படி...? உனக்கு... வழி சொல்ல உன்னை முன்னேற வைக்க... எனக்கு என்ன வந்தது? எல்லாம் என் பணம் மூன்று லட்சத்தை உன்னிடமிருந்து மீட்கத்தான்... புரிகிறதா?"

அவள் கைகளை இடுப்பில் வைத்தபடி எழுந்து கொண்டாள்.

"ஆக... நான் அப்படி சொந்த யூனிட் வைத்து சம்பாதித்து உங்கள் கடன் மூன்று லட்சத்தை அடைக்க வேண்டும்... அது... உங்கள் கனவு... நீங்கள் போட்டிருக்கும் பிளான்?"

அவள் கேட்க அவன் தனது நீளமான தலையை வேகமாய் ஆட்டினான். "ம்ம்... அதேதான்! ஆனால் எல்லோராலும் இதைச் செய்ய முடியாது. சாதிக்க முடியாது. திறமையுள்ள சில புத்திசாலிகள்தான் இதை வெற்றிகரமாய் சாதிக்க முடியும். அதனால்தான் ஆரம்பத்திலேயே உன்னிடம் கேட்டேன். நீ புத்திசாலியா... முட்டாளா... என்று...?"

கேட்டுவிட்டு அவன் நிறுத்தி அவளையே உற்றுப் பார்த்தான்.

அவளும் மௌனமாகி அதேபோல் அவனைப் பார்த்து ஏறக்குறைய முறைத்தாள்.

"இப்போது... சொல்! நீ புத்திசாலியா...? இல்லை... முட்டாளா? என்னவாக இருக்கப் போகிறாய்?"

வேண்டுமென்றே சீண்டினான் அவன்.

அவள் மீண்டும் முறைத்தவள் அதே வேகத்தில் வார்த்தைகளை உதிர்த்தாள்.

"காலம் பதில் சொல்லும்...!"

சொல்லியபடி வேறு எதுவும் பேசாமல் விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள் அவள்.

## 15

'காலம் பதில் சொல்லும்...' என்று சொல்லிவிட்டு வீறாப்பாய் வந்துவிட்டாள். ஆனால் வீட்டிற்கு வந்து யோசிக்கையில் அதுவே பெரும் அதிர்ச்சியாய் இருந்தது.

மாதம் ஒன்பதாயிரம் சம்பளத்திற்கு அடித்துப் பிடித்து வேலை பார்க்கும் அவள் திடீரென தனியாக ஒரு கார்மெண்ட் யூனிட்டை பேக்டரியை தொடங்குவதா?

என்ன ஒரு மடத்தனம்! எப்படி ஒரு வடிகட்டிய முட்டாள்தனம்!

இந்த கார்த்திகேயன் ஏதோ சொல்லி ஐடியா கொடுப்பது போல் மேலும் அவளை ஏதாவது சிக்கலில் மாட்டிவிடப் பார்க்கிறானா? பேங்க் லோன் கடன் என அவள் வாங்கி கட்ட முடியாமல் விழி பிதுங்கி தவித்து நிற்க திட்டமிடுகிறானா?

இதுவெல்லாம் அப்போது தோன்றவில்லையே...? ஏன்? அவன் சொல்லும்போது எல்லாமே சரி என்பது போல்,



சாத்தியமாகக்கூடியது என்பது போல் தலையாட்டத்தானே செய்தாள்?

நினைத்தவள் மறுகணமே சிந்தனையை மாற்றியும் பார்த்தாள்.

ஏன் கூடாது? ஏன் சாத்தியப்படாது...? முயற்சித்தால்தான் என்ன?

இந்த கார்த்திகேயன் சொல்வது அவளது நன்மைக்கோ... இல்லை தீமைக்கோ... அது ஒருபுறம் இருக்கட்டும்... ஆனால் செய்யப்போவது அவள்தானே?

அவள் மட்டும் திட்டமிட்டு வழிமுறைகளை சரியாக கடைப்பிடித்து செய்தால் வெற்றி கிட்டிவிடும் தானே?

யோசிக்க யோசிக்க அந்த எண்ணம் பரபரவென அவளை தொற்றிக்கொண்டது. உற்சாகமடைந்தவளாய் அன்று இரவு முழுவதும் அது பற்றியே நெடுநேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

நினைப்பில் அவள் புது கார்மெண்ட் யூனிட் ஒன்று ஆரம்பிப்பது போலவும், படிப்படியா அது வளர்ந்து வசதிகள் பெருகுவது போலவும் அவளது நடுத்தர குடும்பச் சூழ்நிலை மாறி வசதியான ஒரு வாழ்க்கையை அவளது குடும்ப உறுப்பினர்கள் வாழ்வது போல் ஒரு காட்சி ஓடியது.

அவள் மட்டும் முயற்சித்தால் சரியாக உழைத்தால் அந்த நிலையை எட்டிவிடலாம் தானே?

பின் ஏன் தயங்க வேண்டும்.

அதே யோசனையோடு மறுநாள் எழுந்தவள் தாமதிக்காது, முயற்சிகளிலும் இறங்கிவிட்டாள்.

அன்று அலுவலக வேலைக்கு லீவு போட்டுவிட்டு அவளுக்குத் தெரிந்த தோழி ஒருவளின் கன்சல்டன்சிக்குச் சென்று கார்மெண்ட் யூனிட் ஒன்று தொடங்குவதற்கான திட்ட அறிக்கை ஒன்றை தயார் செய்தாள்.

அப்படி ஆரம்பிக்க ஆகும் முதலீடு, பேக்டரிக்கான இடம், உற்பத்திக்கான மூலதனங்கள், தேவைப்படும் குறைந்தபட்ச ஊழியர்கள் அவர்களுக்கான சம்பள மதிப்பீடு என எல்லாவற்றையும் தயார் செய்து கணக்கிட்டபோது கார்த்திகேயன் சொன்னது போல் பத்து லட்ச ரூபாய் தேவைப்படுவதை உணர்த்தியது.

அன்றே தெரிந்த ஒன்றிரண்டு பேங்க் மேனேஜர்களையும் சந்தித்து தொழிலுக்கான கடன் பற்றி பேசினாள். அவளது கல்வித் தகுதி, கார்மெண்ட் யூனிட்டில் அவளுக்குள்ள அனுபவம், அவளது சரியான திட்ட அறிக்கை என எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்த பேங்க் மேனேஜர் லோன் சாங்ஷன் அனுமதி பற்றி ஒரு வாரத்தில் தகவல் சொல்வதாக சொல்லி அனுப்பினார்.

காத்திருந்தாள் தேவி. இதற்கிடையே கார்த்திகேயன் தொடர்புகொண்டு விசாரிக்க, "பேங்க் லோனுக்காக காத்திருக்கிறேன்..." என்று மட்டும் சொன்னாள்.

பதிலுக்கு, "வாழ்க்கையிலேயே இப்போதுதான் முதன்முறையாய் ஒரு உருப்படியான காரியம் செய்யப் போகிறாய்..." என்றான் குத்தலாய்.

அவளும் விடாமல், "ம்ம்... அப்படி சொந்த யூனிட் தொடங்கி பணம் சம்பாதித்து ஒருவர் முகத்தில் சில லட்சங்களை விட்டெறிய வேண்டி இருக்கிறதே... அது உருப்படியான காரியமாகத்தானே இருக்க முடியும்?" என்றதும் மௌனமாகி ஃபோனை வைத்துவிட்டான்.

மேலும் பத்து பதினைந்து நாட்களுக்கு முன்னதாகவே அவள் வீட்டுப் பக்கம் வருவதை நிறுத்திவிட்டான்.

அவனை ஆவலாய் எதிர்பார்த்த தேவியின் வீட்டு உறுப்பினர்களிடம், "தொழில் விஷயமாய் வெளிநாடு செல்வதாகவும்... மூன்று மாதங்கள் வரை ஆகும்..." என அழகான ஒரு பொய்யை நம்பும்படி சொல்லி விட்டுச் சென்றிருந்தான்.



தேவிக்கு ஒருபுறம் ஆர்வம் இருந்தாலும், மறுபுறம் தொழில் தொடங்கி பணத்தை சம்பாதித்து கார்த்திகேயன் முகத்தில் அவன் கேட்டு தொல்லை செய்த மூன்று லட்சத்தை விட்டெறிய வேண்டும் என்ற வெறியும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தது.

பணத்திமிர் பிடித்த அவனுக்கு ஒரு புத்தி புகட்ட வேண்டும் என நினைத்தாள்.

மறுவாரம் பேங்கிற்கு சென்று மேனேஜரை சந்தித்த போது பெரும் ஆச்சரியம் அவளுக்கு காத்திருந்தது.

அவள் கேட்ட பத்து லட்ச ரூபாய் லோன் இன்னும் பத்து நாட்களில் சாங்ஷன் ஆகிவிடும் என்ற சந்தோஷத் தகவலைச் சொன்னார் அவர்.

நம்பமுடியாமல் இன்ப அதிர்ச்சி கொண்டாள் அவள்.

அதற்குப் பின் அவள் தாமதிக்கவில்லை.

வேகவேகமாய் வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள்.

முதல் காரியமாய் அதுவரை பார்த்த கார்மெண்ட் யூனிட்டின் சூபர்வைசர் பதவியை ராஜினாமா செய்தாள்.

தன்னுடைய வேலை பார்த்த யூனிட்டில் ஐந்து பெண்களை வேலை இல்லை என காரணம் காட்டி நிறுத்தியிருந்தார்கள்.

அவர்களைத் தேடிப் போய் பேசினாள். தான் புதியதாய் தொடங்கும் கார்மெண்ட் யூனிட்டில் வேலைக்கு வர அவர்களை சம்மதிக்க வைத்தாள்.

ஆக... பணியாளர்களை ரெடி செய்தாயிற்று. தேவையான முதலீடும் கிடைத்துவிட்டது. இனி சிறிய பேக்டரி வைக்கத் தேவையான இடத்தைத் தேட வேண்டும்.

வீடு மட்டும் நில புரோக்கர்களிடம் சொல்லி தனது ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு பலமுறை அலைந்தாள்.

ஒரு வார அலைச்சலுக்குப் பின் யூனிட் அமைப்பதற்கு ஏற்ப ஒரு சிறிய குடோன் ஒன்று வாடகைக்கு கிடைக்க... தேவையான அட்வான்ஸைக் கொடுத்து உடனே அதைப் பிடித்தாள்.

இனி யூனிட்டைத் தொடங்க வேண்டியதுதான் பாக்கி.

ஒரு நல்ல நாள் பார்த்து பூஜையுடன் தனது பெயரிலேயே, "தேவி கார்மெண்ட்ஸ்" எனத் தொடங்கினாள்.

கார்மெண்ட் தொழிலுக்கு முக்கியமாய் ஏற்றுமதி ஆர்டர்தான் தேவை இல்லாவிட்டால் தொழில் செய்ய முடியாது என்பதை புரிந்துகொண்டு துணிகளுக்கான ஆர்டர் எடுப்பதில் கவனம் செலுத்தினாள். நிறைய ஏற்றுமதி நிறுவனங்களைச் சந்தித்துப் பேசி வாய்ப்புத்தேட ஆரம்பித்தாள்.

## 16

தேவி துணிச்சலாய் ஆரம்பித்து... பணியாட்களை வைத்து உற்பத்தியும் தொடங்கியாயிற்று.

ஆனாலும் இரவு தூக்கம் வராத அளவுக்கு பிரச்சனைகள் கண் முன் வந்து உறுத்திற்று.

முடியுமா இது?

பேங்க் லோன் பத்து லட்ச ரூபாய்?

அவளை நம்பி கொடுத்திருக்கிறார்கள். மிஷின்கள், அலுவலக சாமான்கள், மூலப் பொருட்கள் என அத்தனையும் வாங்கிப் போட்டாயிற்று.

மேலும் முதலில் தேவைக்கேற்ப ஐந்து பணியாளர்களை நிரந்தர பணியாளர்களாய் ஒப்பந்தம் செய்து துணிகளை உற்பத்தி செய்யும் வேலையையும் தொடங்கியாயிற்று.



இனி தேவைப்படுவது... ஆர்டர்கள்தான்!

சிறு சிறு ஆர்டர்கள் வந்தால் போதாது. பெரிய ஆர்டர்கள்... ஏற்றுமதி நிறுவனங்கள் மூலம் வர வேண்டும். அப்படி வந்தால் தான் அதை சவாலாய் நினைத்து அவள் உழைத்து பெரிதாய் சாதிக்க முடியும்!

நினைத்தவள் தாமதிக்காது பெரிய ஏற்றுமதி நிறுவனங்களின் அதிகாரிகளைச் சந்தித்து வாய்ப்புத் தேடினாள். நம்பிக்கையோடு பேசினாள். சிலர் நிராகரித்தார்கள். சிலர் பேச்சை பொறுமையாய் கேட்டுக்கொண்டு சந்தர்ப்பம் வரும்போது பார்ப்போம் என திருப்பி அனுப்பினர்.

சுவரில் அடித்த பந்து போல் முயற்சிகளில் பின் வாங்கினாலும் பொறுமை காத்தாள் அவள்.

அவள் பொறுமைக்கு வெகுமதி போல் அடுத்த வாரம் ஒரு சம்பவமும் நிகழ்ந்தது.

அன்று யதேச்சையாய் நகரின் பிரபல துணி ஏற்றுமதி நிறுவனரை ஃபைல்களை தூக்கிக்கொண்டு வழக்கம்போல் வாய்ப்புக்காக சந்திக்கப்போனாள் தேவி.

அந்த வயதான வழுக்கைத் தலை மனிதர், கம்பெனியின் முதலாளி. அவள் சொல்வதையெல்லாம் கவனமாய் கேட்டார். பின் அடுத்த நிமிடமே, "நான் முடிவு செய்துவிட்டேன். உனக்குத்தான் எனது கம்பெனியின் அடுத்த ஏற்றுமதி ஆர்டர்!" என இன்ப அதிர்ச்சி கொடுத்தார்.

மனமகிழ்ந்து போனாள் தேவி.

அவள் இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

நகரின் நம்பர் ஒன் ஏற்றுமதி நிறுவனம் அந்த மனிதருடையது. அவருடைய ஆர்டர் கிடைத்துவிட்டால் போதாதா?

அவ்வளவு தான்!

ஒரே மாதத்தில் தேவியின் கம்பெனி... கிடுகிடுவென உற்பத்தியில்... வியாபாரப் பெருக்கில் உயர ஆரம்பித்தது.

மேலும் மூன்று மாதத்தில்... பேங்க் லோனில் பாதிப் பணத்தை அடைக்கும் அளவுக்கு லாபமும் சேர்ந்துவிட்டது.

இதோ... ஆறு மாதங்கள் ஓடிவிட்டது.

தேவியின் நடுத்தர குடும்ப வாழ்க்கை நிலையும் உயர்ந்துவிட்டது.

பேங்க் கடன்களை எல்லாம் அடைத்து சொந்த வீடு வாங்கும் அளவுக்கு உயர்ந்தும்விட்டாள்!

ஆனால் அது போதுமா? அவள் முக்கியமாய் தீர்க்க வேண்டிய இன்னொரு கணக்குக் கடன் இருக்கிறதே...? அதை அந்தக் கடன்காரனான கார்த்திகேயன் முகத்தில் விட்டெறிய வேண்டாம்? கோபமாய் சிந்தித்தாள் தேவி.

## 17

அவள் கையில் அந்தப் பார்சல் இருந்தது. மூன்று லட்ச ரூபாய் கரன்சிகளை பேப்பர் ஒன்றினால் மடித்துக் கட்டப்பட்ட பார்சல்!

விறுவிறுவென கிளம்பியவள் ஸ்டைலாக கால் டாக்ஸி ஒன்றில் போய் அவன் அலுவலகம் முன் இறங்கினாள்.

நேராக உள்ளே நுழைந்து அவனது பெரிய அறையின் கண்ணாடிக் கதவுகளைத் திறந்து அவன் முன் போய் நின்றாள்.

கார்த்திகேயன் குனிந்து ஃபைல் ஒன்றை பார்வையிட்டுக் கொண்டிருந்தவன் திகைப்பாய் நிமிர்ந்தான்.

"இதோ... உங்கள் பணம்! மூன்று லட்சம்! ஒரு நயா பைசா குறையாமல் கொடுத்துவிட்டேன்!"



டக்கென பார்சலை அவன் முன் மேஜையில் வைத்தாள்.

வியப்பாய் புருவம் உயர நிமிர்ந்தவளிடம், "என்ன திகைக்கிறீர்கள்? கணக்குத் தீர்ந்தாயிற்று!" என்றாள்.

அவன் ஓரிரு நிமிடம் அவளை ஆழமான பார்வை பார்த்துவிட்டு மெல்ல தலையசைத்தான்.

இனி இவனுடன் என்ன பேச்சு? எதற்காக பேச வேண்டும்? என்பது போல் விருட்டென திரும்பி நடக்கப் போனாள்.

"நில்...!" என்றான் அவன் கம்பீரக் குரலில் ஆணையிடுவது போல்.

அப்படியே நின்றாள் அவள்.

கைகளைக் கட்டியபடி அவன் மெல்ல நடைபோட்டு அவன் பக்கம் வந்தான். அவளை மேலும் கீழும் ஆழமாய்ப் பார்த்து அளவெடுத்தான்.

பின் ஒருவித அலட்சியப் பார்வையுடன் "இப்போதும் உன்னிடம் அதே கேள்வியைத் தான் கேட்கிறேன். நீ புத்திசாலியா... இல்லை... முட்டாளா...?" என்றான்.

அவள் மைவிழிகள் விரிய திகைக்கத்தான் செய்தாள்.

திரும்பி அவனை வினோதமாய்ப் பார்த்தாள்.

"உனக்கு புரியவில்லை தானே?" என்றான் மறுபடியும்.

தேவிக்கு நிஜமாகவே புரியவில்லைதான்!

என்ன சொல்கிறான் இவன்? இவன் மிரட்டிக்கேட்ட மூன்று லட்ச ரூபாயை முகத்தில் விட்டெறிவது போல் யூனிட் ஆரம்பித்து கடுமையாக உழைத்து மூன்று மாதத்திலேயே திருப்பிக் கொடுத்தாயிற்று. இனி என்ன...? வேறு என்ன இருக்க முடியும்?

அதையே கேள்வியாய்க் கேட்டுவிட்டு அவனைப் பார்த்தாள்.

"உனக்கு இன்னும் புரியவில்லை..." என்றான் அவன்.

பின் அவள் தொடர்ந்து திகைப்பாய் விழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, "இப்போது கிளம்பு. புரிந்து கொண்டபின் என்னிடம் வா...!" என்றான்.

தேவிக்கு அவன் சொல்வது எதுவும் புரியவில்லை. எதையோ உளறுகிறான்... என்ற நினைப்புடன் அங்கிருந்து கிளம்பிவிட்டாள். கிளம்பும் முன், ஒரு பெரிய சலாம் அவனுக்கு அடித்து, "உங்கள் பாக்கி கணக்கை நேர் செய்தாயிற்று மிஸ்டர் கார்த்திகேயன். வருகிறேன்! குட் பை!" என தன் ஆத்திரத்தையெல்லாம் வார்த்தைகளில் காட்டிவிட்டு வேகமாக நடந்தாள்.

அவள் அப்படி வீறாப்பாய் போவதை உதடுகளில் குறும்புச் சிரிப்பு படர பார்த்துக் கொண்டிருந்தான் கார்த்திகேயன்.

தேவி அத்தோடு நிற்கவில்லை. ஸ்வீட் பாக்ஸ்கள் சில வாங்கிக்கொண்டு நேராய் தனக்கு லோன் சாங்ஷன் செய்த பேங்க் மேனேஜரை தேடிப் போனாள்.

ஸ்வீட் பாக்ஸ்களை நீட்டி, "ரொம்பவும் நன்றி ஸார். நீங்கள் அனுமதி தந்த லோன் சாங்ஷன் மூலம்தான் நான் எனது கார்மெண்ட் யூனிட்டை தொடங்க முடிந்தது. அயராத உழைப்பினால் இன்று ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வர முடிந்தது..." என உணர்ச்சி பெருக்குடன் சொல்ல... கடகடவென சிரித்தார் மேனேஜர்.

"ரொம்பவும் சந்தோஷம் அம்மா. ஆனால் லோன் சாங்ஷன் ஆவதற்கு முக்கிய காரணம் நான்... நானல்ல...! மிஸ்டர் கார்த்திகேயன். பிரபல தொழிலதிபர் கார்த்திகேயன் தான்! அவர் தான் தனது சொத்து மதிப்பு டாக்குமெண்ட்டுகளை சிலவற்றை வைத்துக்கொண்டு உனக்கு லோன் கொடுக்க சிபாரிசு செய்தார். இந்த விஷயத்தை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று சொன்னதும் அவர்தான். அதனால் நீ நன்றி சொல்ல வேண்டியது அவருக்குத்தான்...!"

மேனேஜர் தனது உரையை முடிக்க அப்படியே திடுக்கிட்டுத்தான் போனாள் அவள்.



என்ன சொல்கிறார் கார்த்திகேயனா?

அவனா... லோன் கொடுக்க சிபாரிசு செய்திருக்கிறான்... அதுவும் அவளுக்காக அவனது சொத்துப் பத்திரங்களை எல்லாம் செக்யூரிட்டி கொடுத்து... எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்?

அவள் என்னவோ... தனது சொந்த முயற்சியில் தனது அனுபவத் தகுதிகளை வைத்து கிடைத்தது என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறாள்?

எதனால் இப்படி நடந்தது? மூன்று லட்சத்தை ஒரு நயா பைசா குறையாமல் கீழே வைக்க வேண்டும். இல்லாவிட்டால் நடப்பதே வேறு... என்று விரட்டியவன்... எதற்காக வலிய வந்து அதுவும் அவளுக்குத் தெரியாத வகையில் உதவ வேண்டும்?

அதே யோசனையில் அடுத்த ஸ்வீட் பாக்ஸை தூக்கிக்கொண்டு எக்ஸ்போர்ட் ஆர்டர் கொடுத்து கார்மெண்ட் யூனிட் உற்பத்தியை பெருக்க முக்கிய காரணமாயிருந்த அந்த பிரபல ஏற்றுமதி நிறுவன அதிபரை அவரது பெரிய பங்களா வீட்டில் சந்தித்து நன்றி சொல்லப் போனாள்.

ஆனால் பேங்க் மேனேஜரைப் போலவே அவரும் கூச்சத்துடன் சிரித்தார். "ஐயோ! நான் ஒன்றும் சும்மா இரக்கப்பட்டு உனக்கு ஏற்றுமதி ஆர்டரை கொடுக்கவில்லையம்மா...! எல்லாவற்றுக்கும் பலத்த சிபாரிசு... ஸ்ட்ராங்கான ரெக்கமெண்டேஷன்தான் காரணம்! உனக்கு அப்படிச் செய்தவர் யார் தெரியுமா?"

"யார் ஸார்!"

"எனது நண்பரும் பிரபல தொழிலதிபருமான கார்த்திகேயன்தான். அவனுக்காகத்தான் உனக்கு அந்த பெரிய ஏற்றுமதி ஆர்டரை துணிந்து ஒப்படைத்தேன். நீயும் நல்லமுறையில் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சாதனை படைத்துவிட்டாய். கன்கிராட்ஸ்! வாழ்த்துக்கள்...!"

சந்தோஷமாய் வாழ்த்தி அனுப்பி வைத்தார் அவர்.

வெளியே வந்த தேவி மறுபடியும் திகைத்துத்தான் போனாள்!

என்ன இது! அவள் போராடி... கடும் முயற்சி செய்து அந்த எக்ஸ்போர்ட் ஆர்டரை வாங்கி விட்டதாய் அல்லவா நினைத்துக் கொண்டிருந்தாள்?

இப்போது கதையே வேறு மாதிரியாய்... எல்லாமே கார்த்திகேயனின் சிபாரிசால்... எல்லாவற்றுக்கும் பின்னணியாய் கார்த்திகேயன் இருப்பதை அல்லவா உணர்த்துகிறது.

எதற்காக கார்த்திகேயன் இப்படிச் செய்தான்? என்ன காரணத்திற்காக அவளுக்கு உதவ வேண்டும்?

அவள் என்னவோ சொந்த முயற்சியில் உழைத்து போராடி அவன் கேட்ட பணத்தை முகத்தில் விட்டெறித்து விட்டதாய் அல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறாள்?

இங்கு பார்த்தால் எல்லாவற்றுக்கும் பின்னணியாய் கார்த்திகேயன் அல்லவா இருந்து உதவியிருக்கிறேன்?

அவன் கடைசியாய் கேட்ட கேள்வியும் திடுமென அவள் ஞாபகத்திற்கு வந்தது.

'நீ புத்திசாலியா... முட்டாளா...? பதில் சொல்...!'

எதற்காக இப்படிக் கேட்டான்? அதன் அர்த்தம்தான் என்ன?

யோசித்துப் பார்த்தவளுக்கு பளீரென சில விஷயங்கள் புரியத்தான் செய்தது.

புது கார்மெண்ட் யூனிட் தொடங்க ஐடியா கொடுத்தவன் அவன்தான்! அவனே பேங்கில் அவளுக்குத் தெரியாமலே லோன் கிடைக்க உதவியிருக்கிறேன். அவனே பெரிய ஏற்றுமதி ஆர்டர் கிடைக்கவும் உதவியிருக்கிறான். மறுபுறம், என் பாக்கி மூன்று லட்சத்தை ஒரு நயா பைசா குறையாமல் கொடு... என மிரட்டி விரட்டியதும் அவன்தான்!



ஆக... கிள்ளி விடுவதும் அவன்தான்... தொட்டிலை ஆட்டி விடுவதும் அவன்தான்!

எதனால் இப்படிச் செய்கிறாள்?

அவனிடமே நேருக்கு நேர் போய் கேட்போம் என மறுபடி அவனைத் தேடிப் போனாள் அவள்.

அங்கும் அவளுக்கு இன்பமான அதிர்ச்சியொன்று கொடுத்தான் அவன்!

# 18

கார்த்திகேயனின் அலுவலகத்தில் விறுவிறுவென நுழைந்து நேருக்கு நேராய் நின்று அவனைப் பார்த்தாள்.

"எனக்கு ஒன்றும் புரியவில்லை...! எதற்காக இந்த நாடகம்?" என்றாள் அவள் சீறலாய் உஷ்ணமான குரலிலே.

கார்த்திகேயன் தான் அமர்ந்திருந்த குஷன் சேரில் இருந்து எழுந்து மெல்ல அவளை நோக்கி நடந்து வந்தான்.

"இன்னுமா உனக்கு ஒன்றும் புரியவில்லை?"

"புரியவில்லை..." என்றாள் அவள் கண்களையும் கைகளையும் ஒருசேர விரித்தவாறு.

"அபபடியானால் சரி... புரிய வைத்துவிடுகிறேன்..." என்றபடி நேருக்கு நேர் அவள் முன்னால் வந்தவன் சட்டென அந்தக் காரியத்தைச் செய்தான்.

அப்படியே பூக்குவியலை அணைப்பது போல் அவளை இறுக அதேநேரம் மென்மையாய் அணைத்தான்.

பட்டென அவள் இதழ்களில் தனது உதடுகளை ஒற்றிவிட்டு அப்படியே பேசாமல் அணைத்துப் பிடித்திருந்தான்.

“ஆ...! என்ன... இது? விடுங்கள்...! விடுங்கள்...!” அவள் சினம் பொங்க திமிறிப் போராடினாள். விடுபட முயற்சித்தாள்.

ஆனால் அவனாவது விடுகிறதாவது...?

மேலும் அவனை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, “இப்போதாவது தூங்கிக் கொண்டிருக்கும் உன் மனதை தட்டி எழுப்பி நிதானமாய் யோசி! எல்லாம் புரியும்!” என்றான்.

அவனது இறுக்கமான பிடியில் நெளிந்தவள், அவன் சொன்னதைக் கேட்டு திகைக்கவே செய்தாள்.

“பணத்திமிர்... பந்தா செய்கிறேன்... பணத்தை காட்டி மயக்கினேன்... என்றெல்லாம் என்னை சொன்னாயே...? இப்போது பார்... நீயும்... சொந்தமாய் ஒரு தொழில் தொடங்கி... கார், சொந்த வீடு வைத்துக் கொள்ளும் அளவுக்கு பணக்காரிதான்...! அப்படியானால் உனக்கும் பணத்திமிர் வந்துவிட்டதா...? அதை உனக்கு வரவழைக்கத்தான் உன்னைச் சீண்டிவிட்டு உன் வேலையை விடச் செய்து... சொந்தமாய் தொழில் தொடங்க வழிகாட்டி அதற்கு திரை மறைவில் இருந்து உதவிகள் செய்து ஜெயிக்கவும் வைத்தேன்...” என்றவன் நிறுத்தி, “என்ன புரிகிறதா?” என ஒரு உலுக்கு உலுக்கினான்.

அந்த ஸ்பரிச நெருக்கத்தில் சிலிர்த்தவள் ஆனாலும் அதை வெளிக்காட்டாது, “புரிகிறது... ஆனால் எனக்கு... என்னிடம் பணத்திமிர்... இல்லையே...?” என்றாள்.

அவன் அவள் முகத்தருகே தன் முகத்தை கொண்டு சென்றவன், “பின் எனக்கு மட்டும் பணத்திமிர் எப்படி? நானும் உன்னைப் போல் தான் பத்து வருடங்களுக்கு முன் மாத சம்பளத்தில் வேலை பார்த்தேன்.

பின் ஒருநாள் வேலையை உதறிவிட்டு சொந்தமாய் பிசினஸ் கன்சல்டன்ஸி தொடங்கி படிப்படியாய் முன்னேறி பல தொழில்கள் தொடங்கி பணக்காரனாய் தொழிலதிபராய் ஆனேன். இது தவறா...? நீயே சொல்...!” என்றான்.



அவன் கேட்க, “இல்லையே... தவறேதும்... இல்லையே...!” என கைகளை விரித்துச் சொல்லியவள் அவன் இன்னமும் விடாத அந்த ‘அணைப்பால்’ நெளிந்தாள். சிந்தையில் ஒருவித தடுமாற்றம் ஏற்படுவதையும் உணர்ந்தாள்.

அதுவரை அவனது அணைப்பிலிருந்து விடுவிக்கப் போராடிய தனது கைகள் சட்டென சும்மா இருக்க ஆரம்பித்துவிட்டதையும் உணர்ந்து திடுக்கிடவே செய்தாள்.

அவன் அதே நிலையில் அவளை வைத்துக்கொண்டு தொடர்ந்து, “புரிகிறதா?” என்று கேட்க, இம்முறை, “புரியவில்லை...” என்று பதில் சொன்னாள் அவள்.

அதனால் அவனே, “நானே உனக்குப் புரியும்படி விளக்குகிறேன்...” என ஆரம்பித்தான்.

“ஒரு விஷயத்தை நன்கு தெரிந்து கொள். நான் உன்னை முதல் நாள் பார்த்ததுமே மனதார விரும்பியது உண்மை. நீ தான் என் மனம் கவர்ந்த ராஜகுமாரி... மனைவி... என்று அன்றே முடிவு செய்துவிட்டேன். ஆனால் என்ன...? நான் ஒரு அவசரக்காரன். நான் உன்னை விரும்பும் விஷயத்தை அதே அவசரத்தோடு உன்னிடம் சொல்ல நினைத்து உன் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டேன். அதனாலேயே உன் வீட்டு உறுப்பினர்களை எல்லாம் கவரச் செய்த எனக்கு உன்னை கவர்ந்திழுக்க முடியாமல் போயிற்று.

மேலும்... நீ வேறு காதல் என்ற பெயரில் அந்த ஆனந்தனை நினைத்துக் கொண்டிருந்தாய். சரி... அந்த ஆனந்தன் உண்மையிலே நல்லவன் என்றால் இருவரையும் வாழ்த்திவிட்டு ஒதுங்கிக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் பார்... அவன் பணத்துக்காக தன்னையே மாற்றிக்கொள்ளும் ஒரு பச்சோந்தியாய் இருப்பதை கண்டுபிடித்தேன். அதை உனக்கு புரியவைக்கவே அவனுக்கு உயர் வேலையையும் புதுக்காதலி என்றும் ஆசை காட்டி மயங்கச் செய்தேன்.

நான் நினைத்தது போலவே ஆனந்தன் மனம் மாறினான்... உன்னை கை கழுவி உனக்கு டாட்டா காட்டினான். நீயோ உண்மை புரியாமல் நான் எதுவோ சதி செய்து விட்டதாய் நினைத்தாய்...”

சொல்லிக்கொண்டு வந்தவன் அவள் பேசாமல் இருக்க கொண்டிருந்த அணைப்பை மேலும் கொஞ்சம் இறுக்கி, “என்ன உண்மைதானே?” எனவும் அவசரமாய் தலையாட்டினாள்.

“உண்மைதான்...! உங்களை தவறாக நினைத்துவிட்டேன்...!” என்றாள் உணர்ச்சிகளில் தடுமாறும் கிளிப்பிள்ளை குரலில்.

கூடவே அவனது சத்தியப் பிரமானம் போல் ஒலித்த உண்மையான பேச்சு அவன் கண்களில் ஒளியாய் தெரிந்த நேர்மை எல்லாமே அவளை வசீகரப்படுத்தியது. இதுவரைக் காணாததைக் கண்டது போலவே மயக்கம் பொங்க அவனை பார்க்க ஆரம்பித்தாள் அவள்.

அவன் தொடர்ந்தான். “ஒரு விஷயத்தை நன்கு புரிந்துகொண்டேன். என்னுடைய பணக்காரத்தனமே உனக்குப் பிடிக்காமல் என்னை உனக்கு எதிரியாக்கியது என்று. அதனால் அதை மாற்ற உன்னையும் பணக்காரியாக்குவது ஒன்றுதான் வழி... என சிந்தித்து முடிவெடுத்தேன். அதன்படியே காய்களை நகர்த்தினேன். நீயும் புத்திசாலியாய் அயராது உழைத்தாய். பாடுபட்டாய். நான் நினைத்த மாதிரியே வெற்றியும் பெற்றுவிட்டாய்...”

அவன் நிறுத்த, “உங்கள் வாயாலே இப்போது சொல்லிவிட்டீர்கள்...? நான்... நான்... புத்திசாலி... புத்திசாலிதானே...?” என்றாள் சந்தோஷ படபடப்பு தோன்ற.

அவன் கார்த்திகேயன் வாய்விட்டுச் சிரித்தான்.

“ம்ம்... புத்திசாலிதான்...! தொழிலில் திறமையில் நீ மிகுந்த புத்திசாலி. ஆனால் மற்ற விஷயங்களில்...” என மீண்டும் நிறுத்தினான்.



“மற்ற விஷயங்களா... அது என்ன?”

அவள் புரியாமல் தனது மை விழிகளை படபடத்துக் கேட்க, “பார்... உன்னிடம் என்னைப் பற்றி கண்ணுக்குத் தெரியாமல் ஒளிந்திருக்கும் மென்மையான உணர்வுகளை வெளிக்கொண்டு வர... என்னவெல்லாம் செய்து கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது...” என்றபடி தனது கைகளின் இறுக்கமான அணைப்பை அவன் காட்ட முகம் சிவந்து வெட்கமாய் குனிந்தாள் அவள்.

‘இனி பேச வேண்டியது என் முறை...’ என்பது போல் பேச்சை ஆரம்பித்தாள் அவள்.

“நீங்கள் சொன்னது எல்லாமே நிஜம்தான். உண்மைதான். உண்மையில் உள்ளூர உங்களை நான் விரும்பினாலும் என்னை நானே ஏமாற்றுவது போல் பணத்திமிர்... பணக்காரத்தனம் என்றெல்லாம் சொல்லி என்னையே ஏமாற்றிக்கொண்டு இருந்திருக்கிறான். மேலும் என்னைச் சீண்டி விட்டு வாழ்க்கையிலும் என்னை ஒரு படி உயரச் செய்திருப்பது அதற்கு பின்னணியாய் நீங்கள் இருந்து உதவியிருப்பது... இது எல்லாம் எனக்கு நன்கு உரைத்திற்று. எதற்காக நீங்கள் இப்படிச் செய்ய வேண்டும்? என் மீது இவ்வளவு அன்பா உங்களுக்கு...? என்றெல்லாம் இப்போது என்னை சிந்திக்க வைத்து என்னை நெகிழவும் வைத்துவிட்டது. அதனால்...”

அவள் சட்டென நிறுத்தி மறுபடியும் தனது மைவிழிகளை படபடத்துக் காட்டினாள்.

“அதனால்...? என்ன...? சொல்... சொல்... கண்மணி...!” என அவனும் குழைந்தான்.

“இனியும் மறைக்க விரும்பவில்லை. உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நானும் உங்களை விரும்புகிறேன்...!” என்றாள் தெள்ளத் தெளிவாய்.

அவள் சந்தோஷத் திணறலுடன் சொல்ல, “அப்பாடா...! இப்போதாவது முத்து உதிர்த்தாயே...? ஆனால் இதை உன்னிடம்

இருந்து வரவழைக்க தடியால் அடித்து கனிய வைப்பது போல் அல்லவா இறுக்கமான அணைப்பு அஸ்திரம் ஒன்றை உபயோகிக்க வேண்டியதாயிற்று?" என்றபடி அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

அவளும் கூடவே இனிமையாய் சிரித்து, "அந்த அஸ்திரத்தை நீங்கள் உபயோகித்தது போதும்.

இனி நான் உபயோகிககிறேன்..." என்றபடி முதல்முறையாய் தனது கரங்களால் அவனைச் சுற்றினாள். மெல்ல தழுவ ஆரம்பித்தாள் அவள்.

கண்களை மூடி மெய்சிலிர்க்க ஆரம்பித்தான் அவன்!

(முற்றும்)

**அக்ஷயா** மாத நாவல்

*மலர் : 1* *இதழ் : 6*

வெளியிடுபவர் – ஆசிரியர் :

**எம்.எஸ். சித்ரா**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், நந்தனம்,

சென்னை - 35.

போன்: 044-24361734.

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே,
கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

Akshaya Novel Monthly
Owner, Publisher & Editor **M.S. Murugan,**
Published at :
New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,
Nandanam, Chennai - 600 035.